Registered as a NewsPaper

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12



**கணேசா நகையகம்**

தங்கநகை உலகில்
தமக்கென தனியிடம்
பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி.
வவுனியா.
T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987

(சி-12425)

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆடி-23 | 08-08-2005 | திங்கட்கிழமை | ஓசை-171

# மிருசுவிலில் வாள்வெட்டு மூன்று இராணுவத்தினர் காயம்

## அப்பகுதியில் இராணுவம் தீவிர தேடுதல்

*மீசாலை சந்திப்பகுதியில் நேற்றிரவு மூன்று படையினர் இனந்தெரியாதோரால் வெட்டிக்காயப்படுத்தப்பட்டுள்ளனர். இரவு பத்து மணியளவில் அப்பகுதியால் சைக்கிளில் சென்ற மூன்று சிறிலங்காப் படையினரே இவ்வாறு வாளால் வெட்டிக்காயப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. காயமடைந்த படையினர் உடனடியாக சிறிலங்காப் படையினரால் மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இச்சம்பவத்தையடுத்து இப்பகுதியில் பெருமளவு படை யினர் குவிக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டுவருவதாகவும் இதனால் அப்பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.* (28)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட எல்லைப்புற வனப்பகுதியில் மூவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

நேற்றுக்காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஒருவர் கொல்லப் பட்டிருப்பதாகவும் மேலும் இருவர் அங்கிருந்து தப்பி வந்து சிறிலங்கா (!2 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு சவுக்கடியில் இளைஞன் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் சவுக்கடியில் 22 வயது இளைஞரான சிவராசா மரியபாலன் என்பவர் இனந்தெரியாத நபர்களினால் வீதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு 10.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கடற்றொழிலாளரான இவர் வழமை போன்று கடற்றொழிலுக்குச் சென்றிருந்தார் என்றும், திடீரென ஏற்பட்ட சுகவீனம் காரணமாக வீட்டிற்கு திரும் பிக்கொண்டிருந்த சமயம் இனந்தெரியாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கொல்லப்பட்டதாகவும் (!2ஆம்பக்கம் பார்க்க)

## பழக்கடை மீது கைக்குண்டு வீச்சு செங்கலடியில் இருவர் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு செங்கலடிச் சந்தைக் கட்டடத் தொகுதியிலுள்ள பழக்கடை யொன்றில் இடம்பெற்ற குண்டுவீச்சுச் சம்பவமொன்றில் இருவர் காயமடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு 9.35 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இருதயபுரத்தைச் சேர்ந்த விஸ்வநாதன் ரவீந்திரன் (வயது - 40) மற்றும் விநாயகபுரத்தைச் சேர்ந்த ஆறுமுகம் சிறீமோகன் (வயது-46) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். காயமடைந்த இருவரும் வாழைப்பழக்கடையை மூடுவதற்குத் தயாராகிக் கொண்டிருந்த சமயம் இனந்தெரியாத நபர்களினால் கைக்குண்டொன்று வீசப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தாக்குதலின்போது நடைபாதை வியாபார நிலையங்கள் நான்கு சேத மடைந்துள்ளன.ஏறாவூர் சிறிலங்கா பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## திருமலை ஜே.வி.பி. அலுவலகம் மீது தாக்குதல் பொலிஸ் சார்ஜன்ட் உட்பட இருவர் காயம்

(கொழும்பு)

திருகோணமலை கந்தளாயில் அமைந்துள்ள ஜே.வி.பியின் அலுவலகத்தின்மீது குண்டுத்தாக்குதலும், துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கந்தளாய் சிறிலங்காப் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் காயமடைந்துள்ளார். இவர் ஜே.வி.பி. யின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜயசேகரவின் மெய்ப்பாதுகாவலர் ஆவார்.

தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற சமயம் அலுவலகத் தில் ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜயசேகர மக்கள் சந்திப்புக்களை நடத்திக் கொண்டிருந் ததாக ஜே.வி.பி இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கை யில் தெரிவித்துள்ளது.

காயமடைந்த பொலிஸ் சார்ஜன்ட் கந்தளாய் வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் குருநாகல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச்சம்வவத்துடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், குண்டுத் தாக்குதல்கள் மற்றும் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் செல்ல முயன்ற சந்தேக நபர்கள்மீது பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சந்தேக நபரொருவர் காயமடைந்திருப்பதாகவும் கிழக்கு மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் றொகான் அபயவர்த் தன தெரிவித்தார். (!2ஆம்பக்கம் பார்க்க)

## பொலிஸ் அத்தியட்சகர் குறித்த விசாரணையை அவதானிக்கிறோம்

### போர்நிறுத்த கண்காணிப்புக்குழு தெரிவிப்பு

யாழ்ப்பாணம் இணுவில் பகுதியில் சிறிலங்காவின் யாழ்.மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக மேற்கொள்ளப் படும் விசாரணைகளை உன்னிப்பாக அவதானித்து வருவதாக இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பொலிஸ் விசாரணைகள் முடிவுறும் வரை இச்சம்பவம் யுத்தநிறுத்த மீறலா, என்பது குறித்து தெரிவிக்க முடியாது என்று இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பதில் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இணுவில் பகுதியில் பதற்ற நிலையைப் பார்வையிடச் சென்ற யாழ்.மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜய வர்த்தன கடத்தப்பட்டு பின்னர் கொல்லப்பட்டிருந்தமை தெரிந்ததே.

கொல்லப்பட்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரதி பொலிஸ்மா அதிபராக பதவி உயர்த்தப்பட்டுள்ளார். அவரின் இறுதிக்கிரியைகள் குருநாகலில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

## சிப்பாயின் துப்பாக்கி வெடித்ததால் பரபரப்பு

(திருகோணமலை)

திருகோணமலை நகரில் மடத்த டிச் சந்தியில் காவல்பணியில் ஈடுபட் டிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவரின் துப்பாக்கி நேற்று மாலை ஆறு மணியளவில் திடீரென்று வெடித்தது. அதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. எவரும் அச்சம்பவத்தில் காயமடையவில்லை. எனினும் அந்த இடத்திற்கு விரைந்து வந்த படைய திகாரிகள் அந்தச் சிப்பாயை அங்கி ருந்து அகற்றிச்சென்றனர் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (25)

## படையினரால் தடுத்து வைக்கப்பட்ட சிறுவன் குறித்து தகவல் இல்லை

வன்னியிலுள்ள தனது உறவினர்களைப் பார்க்கச்சென்ற சமயம் படையினரால் தடுத்து வைக்கப்பட்ட சிறுவன் குறித்து இதுவரை தகவல் எதுவும் இல்லை என பெற்றோர் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

கடந்த 17 ஆம் திகதி வன்னியிலுள்ள தனது உறவினர்களைப் பார்க்கச் சென்ற கொடிகாமம் அல்லாரைப் பகுதியைச் சேர்ந்த கருணாகரன் சசிகரன் (வயது-16) என்ற சிறுவன் முகமாலை சிறிலங்கா இராணுவச் சோதனைச்சாவடியில் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் இச்சிறுவனை விடுவிக் கப்படாமை குறித்து சிறுவனின் பெற்றோர்கள் இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக்குழு, யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாட்டைத் தெரிவித்தும், இதுவரை சிறுவன் குறித்து எந்தவித தகவலும் இல்லா மையால் பெற்றோர் கவலையடைந்துள்ளனர். (!2ஆம்பக்கம் பார்க்க)

## முல்லை. மாவட்ட அழகக நிலையங்கள் இன்று மூடப்பட்டு துக்கம் அனுஷ்டிப்பு

இணுவில் பிரதேசத்தில் கடந்த வியாழனன்று சிகையலங்கரிப்புத் தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை சிறிலங்கா இராணுவத்தின் துப் பாக்கிச் சூட்டில் பலியான ஜெயசீலன் சாந்தரூபன் என்ற இளைஞனுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக முல்லை. மாவட்ட அழகக நிலையங்கள் அனைத்தும் இன்று மூடப்படவுள்ளன.

இம்மாவட்டத்திலுள்ள அனைத்து அழககங்களும் இன்றைய தினம் மூடப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக முல்லை மாவட்ட அழகக சங்கங்களின் சமாசத்தலைவர் ச. சந்திரலிங்கம் தெரிவித்துள்ளார். (20)

### யாழ். இணுவில் பகுதியில்

## இராணுவச் சூட்டுக்குப் பலியான இளைஞருக்கு ஆயிரக்கணக்கான மக்கள் இறுதி அஞ்சலி

(நல்லூர்)

இணுவில் பகுதியில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியானஇளைஞனின் இறுதிச்சடங்கில் பல் லாயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

கோண்டாவில் கிழக்கு மிஷன்பாடசாலை ஒழுங்கை யில் உள்ள உறவினர் வீட்டில் நிகழ்வுகள் இடம்பெற்று தாவடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

நண்பகல் 2.00 மணிக்கு அஞ்சலி உரை க.தியா கராசா தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி, மாவை பராதி சனசமூக நிலையத்தலைவர் நாகேஸ்வரன் மற்றும் தீவகம், தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம் பகுதிகளைச் சேர்ந்த சிகையலங்கரிப்பாளர் சங்க உறுப்பினர்களான குமார், அன்ரன் இராஜநாயகம், கணேச ரெட்ணம், இரத்தினராசா யாழ்.மாவட்ட சிகையலங்கரிப் பாளர் ஒன்றியத்தலைவர் ரகு, யாழ். மாவட்டபொது அமைப்புக்கள் ஒன்றியச் செயலாளர் சிவராசா உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்கள். (41)

வரி விளம்பரம்

**தயவு கூர்ந்து ஒப்படைக்கவும்**

வவுனியாவில் வசித்து வரும் அந்தோனிப்பிள்ளை மரிய கொறட்டீன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 1515330216-V) இராணுவ அடையாள அட்டை மற்றும் ஆவணங்கள் அடங்கிய மணிப் பேர்ஸ் ஒன்று கடந்த மாதம் கிளிநொச்சி பேருந்து நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள். தயவு கூர்ந்து ஈழநாதம் பணிமனையிலோ அன்றி பேருந்து நிலையத்திலோ ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.தகவல்:மரிய கொறட்டீன். (6409)


# அரசாங்கத்தை நம்பிப்பயனில்லை சொந்தக்காலால் நடக்கப்பழக வேண்டும்

## -பாராளுமன்ற உறுப்பினர் கனகசபை உரை

(நமது நிருபர்)

நமது தேவைக்கு அரசாங்கத்தை நம்பிப்பயனில்லை. நாம் சொந்தக் காலால் நடக்கப் பழகிக் கொள்ள வேண்டும். சிக்கனமும் சேமிப்பும் நமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் என கோடைமேடு கிராம அபிவிருத்திச் சங்க அங்கத்துவர்களுக்கு கடன் வழங்கும் வைபவத்திற்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கனகசபை கூறினார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந் நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் ரூபா ஐயாயிரத்தில் ஆரம்பித்து இன்று அந்த நிதி ஐந்து இலட்சமாக பெருகியுள்ளது மிகவும் பாராட்டுக்குரியதாகும். நமது நாட்டில் இடம் பெறும் ஒற்றையாட்சியில் நாம் எதனையும் பெறமுடியாது. இந்த ஆட்சியில் மாற்றம் ஏற்பட்டால் தான் நன்மை கிடைக்கும். எனவே நமக்கென ஒரு நாட்டை உருவாக்குவது நமது பெரிய கடமையாகும். அதனால்தான் எதிர்கால சந்ததியும் நன்மைபெறமுடியும் என்றார். விஜயசுந்தரம் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் சி.பாஸ்கரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.மயில்வாகனம், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. இன்பராசா ஆகியோரும் கலந்து சிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமைச்சுச் செயலராக சுவாமிநாதன்

(திருமலை)

வடக்கு கிழக்கு மாகாண மீள் குடியேற்ற மீளமைப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சின் புதிய செயலாளராக வி.செ.சுவாமிநாதன் கடந்தவெள்ளிக்கிழமை நண்பகல் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார். இதுவரை இவர் மாகாணத்திட்டமிடல் பிரதிப்பிரதம செயலாளராகப் பணிபுரிந்துவந்தார். மாகாண ஆளுநர் டிரோன் பெர்ணாண்டோ, சுவாமிநாதனை மாகாண அமைச்சின் செயலாளராக ஆகஸ்ட் முதலாம் திகதி தொடக்கம் நியமித்துள்ளார். வி.செ.சுவாமிநாதன் இலங்கைத் திட்டமிடல் சேவையின் முதலாம் தர அதிகாரியாவார் என்பது குறிப்பிடத்தக்கது. (25)

# 65 மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கல்

(மன்னார்)

மன்னார் பிரஜைகள் குழுவின் அனுசரனையுடன் கல்விகற்பதற்கு தேவையான உபகரணங்களும் ஆடைகளும் 65 மாணவ மாணவிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி உபகரணங்கள் சென் ஜோன்ஸ் சிறுவர் இல்லத்தில் கல்வி கற்கும் சுனாமியால் பாதிக்கப்பட்டு பெற்றோரை இழந்த19சிறுவர்களுக்கும், மன்னார் உப்புக்குளம் அன்னை இல்லத்திலிருக்கும் 46 மாணவ மாணவிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. (18)

# அரச அதிபர் அலுவலகங்களில் தொழில்நுட்ப அலுவலர்கள் சேர்ப்பு

அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்குள் இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். போட்டிப் பரீட்சையின் மூலம் தொழில்நுட்ப அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பு நடைபெறவுள்ளது. விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும், 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். போட்டிப் பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணம் ரூபா 250 அறவிடப்படும். இதற்கான பற்றுச்சீட்டை மாவட்ட செயலகங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை பரீட்சைஆணையாளர் நாயகம் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைப் பிரிவு பரீட்சைத் திணைக்களம், பொலவத்த பத்தரமுல்ல எனும் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும் விண்ணப்ப முடிவுத்திகதி அடுத்த மாதம் இரண்டாம் திகதியாகும்.

# மிதிவெடி விழிப்புணர்வு வாரத்தையொட்டி 2000 சிறுவர்கள் பங்கேற்ற பேரணி

(மட்டக்களப்பு)

கடந்த ஒருவாரகாலமாக இலங்கையில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த மிதிவெடி விழிப்புணர்வு வாரத்தையொட்டி கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு செங்கலடியில் நடைபெற்ற சிறுவர் பேரணியில் 2000 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் கலந்து கொண்டனர்.

மிதிவெடி விழிப்புணர்வு வாரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் யுனிசெப் அனுசரணையுடன் சர்வோதய இயக்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இறுதிநாள் நிகழ்வாக செங்கலடிச் சந்தியிலிருந்து கிழக்குப் பல்கலைக்கழகம் வரை நடைபெற்ற சிறுவர் பேரணியில் மிதிவெடி அபாயமுள்ள பிரதேசங்களைச் சேர்ந்த சிறார்கள் கலந்து கொண்டார்கள்.

இந்தப் பேரணியில் கலந்து கொண்ட சிறார்கள் மிதிவெடிகளுக்கு எதிராக பல்வேறு வாசக அட்டைகளை ஏந்தியவாறு கோசங்களையும் எழுப்பினார்கள்.

கிழக்குப் பல்கலைக்கழக பிரதான மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் செங்கலடி பிரதேச செயலாளர் எம்.உதயகுமார், சர்வோதய மாவட்ட இணைப்பாளர் ஈ.எல்.எம்.கரீம் மற்றும் சிறிலங்கா பொலிசார் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மிதிவெடி அபாயக்கல்விக்கான யுனிசெப் திட்ட கிழக்கு மாகாண இணைப்பாளர் செல்வி.வதனி மரியநாயகம் இங்கு உரையாற்றுகையில்; மிதிவெடி விழிப்புணர்வு வாரம் மற்றும் மிதிவெடி அபாயக் கல்வி ஆகிய நடவடிக்கைகள் மூலம் வெடிபொருள் விபத்துக்களை கட்டுப்படுத்தக் கூடியதாகவுள்ளது.

2004 ஆம் ஆண்டிற்கு முன்பு இப்படியான விபத்துக்கள் வருடாந்தம் 15 முதல் 20ஆக இருந்தது.

மிதிவெடி அபாயக்கல்வி நடைமுறைக்கு வந்தபின்பு இந்த எண்ணிக்கை இரண்டு முதல் நான்கு ஆகக்குறைந்து தற்போது ஒன்று , இரண்டு என மேலும் குறைந்துள்ளது என்றார்.

# உணர்வுகளின் பயணம் நூல் அறிமுகவிழா

(அலுவலகசெய்தியாளர்)

யாழ்.தேசியகல்வியற் கல்லூரியின் ஐந்தாம் அணி முகிழ் நிலை ஆசிரியர் திருநகரூர் செல்வி .தர்சினி ஆனந்தராஜா எழுதிய "உணர்வுகளின் பயணம்" நூல் அறிமுகவிழா கிளிநொச்சியில் நேற்று நடைபெற்றுள்ளது.

நேற்றுக்காலை 10.30 மணிக்கு கிளி. அழகியல்கலாமன்றத்தில்




நடைபெற்ற இந் நிகழ்வில் தமிழீழதேசியக்கொடியை புலிகளின் குரல் நிறுவனதுணைப்பொறுப்பாளர் செயல்வீரன் ஏற்றினார். மங்கலவிளக்கினை நூலாசிரியர் தர்சினியின் தந்தையார் ஆனந்தராஜா ஏற்றிவைத்தார்.

இதனைத் தொடர்ந்து யாழ்.தேசியக் கல்வியற்கல்லூரி ஆசிரிய மாணவன் சோ.கி.கலைக்கதிர் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமானது.

இதில் வரவேற்புரையை மட்டு. தேசியகல்வியியற் கல்லூரி மாணவன் எஸ்.தவரூபன் நிகழ்த்தினார். தலைமைஉரையைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர் உரையை எழுத்தாளர் நா.யோகேந்திரநாதன் நிகழ்த்தினார். வாழ்த்துரையை ஆசிரியர் திருமதி. சோமசேகரம் நிகழ்த்தினார்.

உணர்வுகளின் பயணம் நூலின் சிறப்பு பிரதியை வவுனியா தேசியக் கல்வியியற்கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர் கு.கனரகரத்தினம் வெளியிட்டுவைக்க ஆய்வாளர் மு.திருநாவுக்கரசு பெற்றுக்கொண்டு அறிமுக உரையை நிகழ்த்தினார். நூலாசிரியர் செல்வி.தர்சினி ஆனந்தராஜா பதிலுரையாற்றினார். பசுந்தரட்டை தேசியகல்வியற் கல்லூரி மாணவன் எஸ்.ரஜீபன் நன்றி உரையை வழங்கினார்.

இந் நிகழ்வில் கலையார்வலர்கள் எழுத்தாளர்கள் எனப் பெருமளவானவர்கள் கலந்துகொண்டிருந்தனர். (லோ)

# ஆசிரியர்களின் சம்பள நிலுவை வழங்க திறைசேரியால் 120 மில்லியன் ரூபா அனுப்பி வைப்பு

(திருகோணமலை)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆசிரியர்கள், அதிபர்களுக்கு சம்பள நிலுவைகளை வழங்குவதற்காக கொழும்பு திறைசேரி, மாகாணத் திறைசேரிக்கு 120 மில்லியன் ரூபாவை அனுப்பியுள்ளது. வடக்கு கிழக்கு மாகாணத்தில் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு சம்பள நிலுவைகளை வழங்குவதற்கு மொத்தமாக 150 மில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும் இப்போது 120 மில்லியன் ரூபாவே அனுப்பப்பட்டுள்ளதாகவும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார். (25)

# எஞ்சிய பகுதிநேர ஆங்கில ஆசிரியரும் நிரந்தரமாக்கப்படவுள்ளனர்

## - சங்கப் பொதுச்செயலர் மகாசிவம் தெரிவிப்பு

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் எஞ்சியுள்ள பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களும் நிரந்தரமாக்கப்படவுள்ளனரென இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார். 30.06.2005 இற்கு முன்னர் தொடர்ச்சியாக 180 நாட்கள் கடமையாற்றிய பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களே இவ்விதம் நிரந்தரமாக்கப்படவுள்ளனர்.

இதற்கான பொது நிர்வாக அமைச்சின் சுற்று நிருபம் வடக்கு கிழக்கு மாகாணக் கல்வியமைச்சுக்குக் கிடைத்துள்ளது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். அண்மையில் 231 பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களும், 300 உயர்தரம் சித்தி பெற்ற ஆங்கில ஆசிரியர்களும் வடக்குக் கிழக்கில் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் மூன்றாம் தவணை ஆரம்மாகும் போது பிரஸ்தாப எஞ்சிய ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் கிடைக்க மாகாணக் கல்வி அமைச்சும் உரிய ஆவணங்களை விரைவாக அனுப்பிஉதவ வலயக்கல்விப் பணிமனைகளும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனச் செயலாளர் மகாசிவம் கேட்டுள்ளார்.

# இந்தியாவிலிருந்து நாடு திரும்பியோருடன் தொண்டு அமைப்புப் பிரதிநிதிகள் சந்திப்பு

(மன்னார்)

இந்தியாவிலிருந்து நாடுதிரும்பி மீளக்குடியமர்ந்துள்ள மன்னார் மாவட்டத்தின் 200 இற்கும் மேற்பட்ட குடும்பத் தலைவர்களுக்கான கருத்தரங்கொன்று மன்னார் மாவட்டத்திலுள்ள வை.எம்.சி.ஏ மண்டபத்தில் நேற்று இடம் பெற்றுள்ளது.

இக்கருத்தரங்கை மன்னாரிலுள்ள ஐ.ஓ.எம் நிறுவனம் நடத்தியிருந்தது இக்கருத்தரங்கில் யு.என்.எச்.சி.ஆர் வாழ்வோதய,வேள்ட்விஷன் , யு.என்.டி.பி மனித உரிமை ஆணைக்குழுஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து ஆவண செய்வதாகவும் உறுதியளித்துள்ளனர். (18)

# கண்டாவளை பிரதேசமுன்பள்ளி கட்டமைப்பு தெரிவு

தமிழர்புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் ஒழுங்கமைப்பில் கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனத்தினால் கண்டாவளைப் பிரதேசத்திலுள்ள அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களையும்,பெற்றோர்களையும் ஒன்றிணைந்து பிரதேச கட்டமைப்பு தெரிவு செய்யப்படுவதற்கான கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

முன்பள்ளிகளுக்கான பிரதேச விளையாட்டு விழா சம்பந்தமாகவும், கண்காட்சி சம்பந்தமாகவும் ஆராயப்பட்டு பிரதேசக் கட்டமைப்பு தெரிவு செய்யப்பட்டது. தலைவராக த.ரூபகுமார். தெரிவு செய்யப்பட்டார். தொடர்ந்து சிறப்புரைகளை விசுவமடு பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சோழநிலவன், கண்டாவளைப் பிரதேச உதவிப் பணிப்பாளர் , நா.கீதன், கிளி.மாவட்ட முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையவலய இணைப்பாளர் திருமதி. ச.றஜனி ஆகியோர் ஆற்றினர்.

# அமெரிக்கப்படையினரை எதிர்த்துப் போரிட
# ஈரானில் இருந்து நவீனரக குண்டுகள்

(நியூயோர்க்)

**அமெரிக்க மற்றும் ஈராக் படையினரை எதிர்த்துப் போரிட நவீனரக குண்டுகள் ஈரானில் தயாரிக்கப்பட்டு ஈராக்கிற்கு ஏற்றுமதி ஆவதாக நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.**


ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படைகளை அங்குள்ள சனி முஸ்லிம் பிரிவினர் தீவிரமாக எதிர்த்து வருகின்றனர். இதற்காக, ஈரான் சியா பிரிவினருடன் புதிதாகக் கூட்டுச்சேர்ந்துள்ளனர். அதன் படி பல நவீனரகக் குண்டுகள் ஈரானில் தயாரிக்கப்படுகின்றன. அமெரிக்க மற்றும் ஈராக்கிய கூட்டுப்படையினரை வீழ்த்த இந்த ஆயுதங்களை பயன்படுத்துகின்றனர். இந்த நவீன குண்டுகள் ஈரானிலிருந்து கப்பல் வழியாகக் கொண்டு வரப்படுவதாகவும், ஈரானின் புரட்சி இயக்கமான ஹிஸ்புல்லாதான் இதைக் கொண்டு வந்தது என்றும் அமெரிக்க உளவுப் பிரிவினர் தகவல்தெரிவித்துள்ளனர். மேலும் இஸ்ரேலில் தாக்குதல் நடத்தப்பயன்படும் நவீனரக குண்டுகள் இதே வகையை ஒத்தவையாக உள்ளன என்றும் உளவுப்பிரிவு கூறுகிறது. ஈரான் அரசுக்கும் நவீன குண்டுகள் தயாரிப்பிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும் உளவுப்பிரிவு உறுதிப்படுத்தியுள்ளது. இவ்வாறு நியூயோர்க்டைம்ஸ்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### லண்டன் நகர்மீதான குண்டுத்தாக்குதல் பிரிட்டிஷ் உளவுத்துறைக்கு ஏற்பட்ட தோல்வியே

அவுஸ்திரேலியப் பிரதம மந்திரி ஜோன் ஹவாட் அவுஸ்திரேலியாவிலுள்ள முஸ்லிம் தலைவர்களைஅழைத்து பயங்கரவாத எதிர்ப்பு மாநாடொன்றை நடத்தியுள்ளார்.

இரகசிய மறைவிடங்களைக் கண்டு பிடித்து பயங்கரவாதிகளைக் கைது செய்ய இஸ்லாமிய சமூகத்தின் பெரும் உதவி அரசாங்கத்திற்கு தேவைப்படுகின்றதென்று பிரதம மந்திரி ஜோன் ஹவாட் கூறியுள்ளார்.

லண்டனில் கடந்த மாதம் ஏழாந் திகதி இடம்பெற்ற குண்டுத்தாக்குதல்கள் பிரிட்டிஷ் உளவுத்துறையின் தோல்வியையே வெளிப்படுத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.



பசுபிக் கடலில் ஏழு கடற்படையினருடன் வலையில் சிக்கிய AS 28 ரக ரஷ்ய நீர்மூழ்கிக் கப்பல் பிரிட்டிஷ் கடற்படையால் மீட்கப்பட்ட நிலையில், கம்ஸட்கி AS 29 என்ற அதே ரக நீர்மூழ்கிக் கப்பல் பழுதடைந்த நிலையில் துறைமுகமேடையில் ஏற்றப்பட்டுள்ளது.



பசுபிக் பெருங்கடலில் சிக்கிய ரஷ்ய நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து மீட்கப்பட்ட ஏழு ரஷ்ய கடற்படையினர் பிரிட்டிஷ் கப்பலில் இருந்து இறங்கி வருகின்றனர்.

## சுற்றுலாப் பயணிகள் கொலை வழக்கு சார்லஸ் சோப்ராஜுக்கு ஆயுள் தண்டனை

(காத்மண்டு)

சுற்றுலாப்பயணிகளை கொலை செய்த வழக்கில் சர்வதேச குற்றவாளியும், பலரைக் கொன்றவருமான சார்லஸ் சோப்ராஜுக்கு விதிக்கப்பட்ட ஆயுள் தண்டனை கடந்த வியாழனன்று உறுதி செய்யப்பட்டது. இதை எதிர்த்து ஐ.நா. சபையின் மனித உரிமை சபையிடம் முறையீடு செய்ய இருப்பதாக சோப்ராஜின் சட்டவாளர் கூறியுள்ளார்.

நேபாளத்தில் கடந்த 1975 ஆம் ஆண்டு சுற்றுலாப் பயணிகள் இரண்டு பேர் கொல்லப்பட்ட வழக்கில் சர்வதேச குற்றவாளி சார்லஸ் சோப்ராஜுக்கு காத்மண்டு மாவட்ட நீதிமன்றில் ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. இதை எதிர்த்து லலித்பூர் நீதிமன்றில் சோப்ராஜ் மேன்முறையீடு செய்தார். காத்மண்டு மாவட்ட நீதிமன்றத் தீர்ப்பை லலித்பூர் நீதிமன்று உறுதி செய்தது. கடந்த 2003 ஆம் ஆண்டு முதல் சோப்ராஜ் காத்மண்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந் நிலையில் இந்த விவகாரத்தை ஐ.நா சபையின் மனித உரிமை சபையிடம் எடுத்துச் செல்லப்போவதாக சோப்ராஜின் சட்டவாளர் இசபெல் பெய்ரி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில்; சோப்ராஜின் தண்டனையை நீதிமன்று உறுதிசெய்திருப்பது அதிர்ச்சி அளிக்கிறது. சட்ட விவகாரங்களுக்கான சர்வதேச ஒப்பந்தத்தை மீறிய செயல் இது என்பதை மனித உரிமை சபையில் எடுத்துச்சொல்வேன் என்றார்.

## ஈரானின் புதிய அதிபராக முகமது அகமதினிஜாத் பதவியேற்பு

(தெஹ்ரான்)

பழமைவாத தலைவரான முகமது அகமதினிஜாத் ஈரான் சனாதிபதியாக நேற்று முன்தினம் பொறுப்பேற்றார்.

ஈரானில் கடந்த யூனில் பொதுத் தேர்தல் நடந்தது. ஈரான் தலைநகர் தெஹ்ரானின் முன்னாள் மேயரும் பழமைவாத தலைவருமான முகமது அகமதினிஜாத் (வயது-48) வெற்றி பெற்றார். ஈரானின் பலம்மிக்க தலைவரான அயதுல்லா அலி கொமேனியும் அவருக்கு அங்கீகாரம் வழங்கினார். இதைத் தொடர்ந்து நேற்று அதிபர் பதவியை அகமதினிஜாத் ஏற்றுக் கொண்டார்.

பாராளுமன்றத்தில் நடந்த விழாவில் புனித நூலான குரானின் பெயரில் அவர் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டார். பின்னர் அளித்த பேட்டியில் எல்லாருக்கும் நீதி, அமைதி, கௌரவம் கிடைக்க வேண்டும். இஸ்லாமிய அரசின் நிர்வாகிகள் அனைவருக்கும் மக்களுக்கு சேவை செய்வதைத் தவிர வேறு பணியில்லை என்று கூறினார்.



ஈரானின் அணு ஆயுதத் திட்டத்தை அமெரிக்கா கடுமையாகக் கண்டித்து வருகிறது. ஈரான் மீது பொருளாதாரத் தடை விதிக்கவும் முயற்சி மேற்கொண்டுள்ளது. இது போன்ற இக்கட்டான சூழ்நிலையில் அதிபர் பதவியை அகமதினிஜாத் ஏற்றுள்ளார். விரைவில் அவர் அமைச்சர்களை நியமிக்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.



காசா முனையிலுள்ள யூதக் குடியிருப்புக்களை அகற்றுதல் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்க அமைச்சரவையை கூட்டியிருக்கும் இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன்.

## துனிசியா விமானம் கடலில் வீழ்ந்தது 19 பேர் பலி;20 பேர் உயிருடன் மீட்பு

துனிசியா நாட்டுக்குச் சொந்தமான விமானம் ஒன்று சிசிலி அருகே கடலில் வீழ்ந்ததில் 19 பேர் உயிரிழந்துள்ளனர். இவ் விபத்துப் பற்றி தெரியவருவதாவது;

விமானம் நடுவானில் பறந்து கொண்டிருந்த போது விமானத்தின் இயந்திரத்தில் திடீர் கோளாறு ஏற்பட்டது. விமானம் தாறுமாறாக பறந்தது. விமானத்தை சிசிலி தீவு அருகே தரை இறக்க விமானி முயன்றார். ஆனால் விமானம் கட்டுப்பாட்டை இழந்து சிசிலி அருகே கடலில் வீழ்ந்தது. இந்த விபத்தில் விமானத்தில் இருந்தவர்களில் 19 சுற்றுலாப்பயணிகள் பலியானார்கள்.

விமானம் பாதி மூழ்கிய நிலையில் கடலில் மிதந்து கொண்டிருந்தது. உயிர் பிழைத்த பயணிகள்கடலில் மிதந்த விமானத்தின் சிறகில் ஏறி அமர்ந்து கொண்டு உதவி கேட்டு கூக்குரல் எழுப்பினார்கள். சிலர் தண்ணீரில் தத்தளித்துக்கொண்டிருந்தனர்.



உலங்குவானூர்திகளும், கடலோரப் பாதுகாப்புப் படகுகளும் விபத்து நடந்த இடத்துக்கு விரைந்து சென்று 20 பயணிகளை மீட்டனர். அவர்களில் ஒன்பது பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



உலகின் பல நாடுகளில் மழை பிச்சு உதறுகிறது! தயவு தாட்சண்யம் பார்க்காமல் மக்களை அல்லல்படுத்துகிறது. சாலைகள், தகவல் தொடர்புகள், போக்குவரத்து, மின்வசதி என்று எல்லாவற்றையும் துவம்சம் செய்கிறது. தென்கொரியாவில் பலத்த மழை பெய்து பல இடங்களில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. பல வீதிகளையும் மணல் மேடு போல அரித்துச்சென்று விட்டது. ஜியோன்ஜு நகரில் வீதி அரிக்கப்பட்டதால் வாகனங்கள் வெள்ளத்தில் விழுந்து அடித்துச்செல்லப்பட்டன. சில வாகனங்கள் அப்போதோ இப்போதோ என்று தொங்கிக் கொண்டிருக்கின்றன.

## தபால் சேவை தனியார் மயமாக்கல் பலப்பரீட்சையில் ஜப்பானியப் பிரதமர்


ஜப்பானிய பிரதம மந்திரி யுனிசுரோ கொய்சுமி முன்வைத்துள்ள தபால் சேவை தனியார்மயத்திட்டம் தொடர்பான சட்ட மூலங்கள் பாராளுமன்றத்தில் நிராகரிக்கப்பட்டால் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு முயற்சிக்க வேண்டாமென்று கட்சிப்பிரமுகர்கள் விடுத்த வேண்டுகோள் ஒன்றை நிராகரித்து பலப்பரீட்சையொன்றுக்கு பிரதமர் கொய்சுமி தயாராகி வருகின்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஜப்பானில் பரந்தளவிலான சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு மூலாதாரமாகக் கருதப்படும் ஆறு தபால்சேவை சட்ட மூலங்கள் மீது இன்று பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது. கடந்த அரைநூற்றாண்டின் காலத்தில் கூடுதலான காலப்பகுதியில் அதிகாரத்தில் இருந்து வந்த கொய்சுமியின் லிபரல் சனநாயகக்கட்சிக்குள் பலர் அவரது சீர்திருத்தங்களை எதிர்த்து வருவது குறிப்பிடத்தக்கது.

இது வரை ஒரு தீர்மானத்துக்கு வராத பாராளுமன்ற உறுப்பினர்களை சட்ட மூலங்களிற்கு ஆதரவாக வாக்களிக்குமாறு கட்சித்தலைவர்கள் கூறிவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த சட்ட மூலங்கள் நிராகரிக்கப்படும் பட்சத்தில் அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லை என்பதை கருத்திற்கொண்டு இடைத்தேர்தல் நடத்தப்படலாம் என்று பிரதமர் கொய்சுமி பல தடவைகள் தெரிவித்துள்ளார்.



சியா முஸ்லிம் மதத்தலைவரான மொகமட் அல் அசனி ஈராக் பொலிசார் மீது தாக்குதல் நடத்துவதாகக் கூறி, பிடித்துக் கொடுப்போருக்கு சன்மானம் வழங்கப்படுமென பொலிசார் தெரிவித்துள்ளதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தும் பொது மக்கள்.

# தேசத்தின் பொருளாதாரத்தை வலுவுடையதாக்க அர்ப்பணிப்புடன் உழைப்பது அவசியமாகும்



## - தமிழீழ வைப்பக மேலாண்மை பணிப்பாளர்

(அலுவலக செய்தியாளர்)

*"தேசத்தின் பொருளாதாரத்தை வலுவடையச் செய்வதற்காக முழுமையான அர்ப்பணிப்புடன் தொழில் முயற்சியில் ஈடுபட்டு உங்களதும் உங்கள் தேசத்தினதும் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக அயராது உழையுங்கள்'' இவ்வாறு தமிழீழ வைப்பக மேலாண்மைப்பணிப்பாளர் ம. வீரத்தேவன் தெரிவித்தார்.*

நேற்று முன்தினம் கிளிநொச்சி கரடிப் போக்குசந்தியில் அமைந்துள்ள இளவேனில் வாணிபத்தின் இராசன் கடலுணவு வாணிபத்தில் நடைபெற்ற கடற்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கான கடன் வழங்கும் நிகழ்வில் கலந்து சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இளவேனில் வாணிப இராசன் கடலுணவு வாணிபத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

2004ஆம் ஆண்டு இடம்பெற்ற இயற்கைப்பேரனர்த்தம் எங்கள் தாயகத்தில் பேரிழப்பை ஏற்படுத்தியது. இதுவே முதலாவது பேரனர்த்தம் . இந்த இயற்கை அனர்த்தத்தின் தாக்கத்தில் இருந்து விடுபடுவதற்காக பல்வேறுபட்ட புனர்வாழ்வு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இந் நிலையில் தமிழீழ வைப்பகத்தால் கடந்த மார்ச் மாதம் முதல் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கான கடன் திட்டத்தை அறிமுகப் படுத்தியிருந்தோம்.

கடற்கோளால் பாதிக்கப்பட்டுப்போயுள்ள எங்கள் மக்களின் வாழ்வைக் கட்டியெழுப்புவதற்காக பல்வேறுபட்ட அமைப்புக்கள் நாங்கள் அதுதருகிறோம் இதுதருகிறோம் என்று வாக்குறுதி அளித்தார்கள் ஆனால் அவை எங்கள் மக்களின் இழப்பை ஈடுசெய்யக் கூடியதாய் இல்லை. இதேசமயம் இவற்றில் பெரும்பாலானவை வாக்குறுதிகளாக மட்டுமே இருந்தன. நடைமுறைப்படுத்துவதாக இருக்கவில்லை.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தான் கடற்கோளினால் பாதிப்புற்றோருக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. பொது முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனைவிட சர்வதேச நாடுகள் இலங்கையில் ஏற்பட்டுள்ள சுனாமிஅனர்த்த புனர்நிர்மாணப்பணிகளுக்கு நிதிப்பங்களிப்புச்செய்யத் தயாராக இருப்பதாகக் கூறின.அதற்கான பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்காக உருவாக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பு இன்று என்ன நிலையிலுள்ளது என்பது அனைவருக்கும் தெரியும்.

இந்தக் கோரிக்கைகள் நிறைவேறாத நிலையில் இந்தக் கடனுதவி இன்று நடைமுறைப்படுத்தப்படுகிறது.. இந்தத்திட்டத்தில் இளவேனில் வாணிபத்தின் முழுமையான முயற்சி, அதன் சமூகப்பொறுப்பு என்பவை தான் முதன்மையானவையாகவுள்ளது. தமிழீழ வைப்பகத்திடம் இவர்கள் வந்து கடற்றொழிலாளர்களுக்கான கடன் திட்டங்களை அறிமுகம் செய்யுங்கள் என்று அழுத்தம் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். அதன்படி ஒரு திட்டவடிவமாக்கி இன்று நடைமுறைக்கு வந்தி ருக்கிறது..

அதேவேளை ஒரு தேசத்தின் பொருளாதார வளர்ச்சி கருதி வழங்கப்படுகின்ற வங்கிகளின் கடன் அந்த தேசத்தின் பொருளாதாரத்தை உண்மையாக வளர்ச்சியடையச் செய்வதாக இருக்கவேண்டும் என்பதுதான் வங்கியாளர்களாகிய எங்கள் நோக்கம் . அதேபோல இந்த வாணிபத்தின் நோக்கங்களில் ஒன்று வருமானம், மற்றையது சமூகப்பொறுப்பு. சமூகப் பொறுப்பின் ஊடாக அவர்களின் எதிர்பார்ப்பை நீங்கள் நிறைவு செய்ய வேண்டும். அதற்காக முழுமையான அர்ப்பணிப்புடன் தொழில் முயற்சியில் ஈடுபட்டு உங்களதும் உங்களைச்சார்ந்த தேசத்தினதும் பொருளாதாரத்தை மேம்பாடடைய உழைக்க வேண்டும். இவ்வாறு செயற்பட்டு எங்கள் அனைவரது எதிர்பார்ப்பையும் செவ்வனே நிறைவு செய்யவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (லோ, தீ )

## இன்று ஆண்டு-5 புலமைப்பரிசில் முன்னோடிக்கருத்தரங்கு

இவ்வருடம் ஆண்டு-5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் முல்லைத்தீவு மாவட்ட மாணவர்களின் நன்மை கருதி இன்று திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு முன்னோடிக்கருத்தரங்கு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மண்டபத்தில் நடாத்தப்படவுள்ளது.

மேற்படி பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் மாணவர்களை இக்கருத்தரங்கில் கலந்து கொள்ளச் செய்வதற்கு அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஒத்துழைப்பு வழங்குமாறு முல்லை பிரதிக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

ஒன்பதாம் திகதி நடாத்தப்படுமென கல்விப் பணிமனையால் அறிவிக்கப்பட்ட அறிவித்தலின்படி கருத்தரங்கு நடைபெறாது எனவும் ஒருநாள் முற்போடப் பட்டு இக்கருத்தரங்கு இன்று நடைபெறும் என்பதையும்

முன்னர் குறிப்பிட்டபடி இரண்டு நிலையங்களிலும் இக்கருத்தரங்கு நடைபெறாது, புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் மாத்திரமே நடைபெறும் என்பதையும் கவனத்திற் கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (08)

## இளம் பெண்ணின் சடலம் அடையாளம் காணப்படவில்லை

மட்டக்களப்பு மத்திய கல்லூரி விடுதிக்குள் வெட்டுக்காயங்களுடன் கண்டெடுக்கப்பட்ட இளம் பெண்ணின் சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏழு நாட்கள் வரை அடையாளம் காணப் படாதவிடத்து சடலம் அரசசெலவில் அடக்கம் செய்யப்படுமென வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.



புதுக்குடியிருப்பு - வேணாவில் வீதி முச்சந்தியில் ஆலமரக் கிளையொன்று முறிந்து வீதிக்கு குறுக்காக ஒரு வாரத்துக்கும் மேலாக கவனிப்பாரற்றுக் கிடப்பதை படத்தில் காண்க. இதனால் இவ்வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. (சி)

## விசுவமடு பிரதேச அபிவிருத்தியை நோக்காகக்கொண்டு கலந்துரையாடல்

(விசுவமடு)

விசுவமடுப் பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று கடந்த வெள்ளிக் கிழமை இடம்பெற்றுள்ளது.

காலை பத்து மணிக்கு விசுவமடு மகாவித்தியாலயத்தில் விசுவமடுப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் மு. சோழநிலவன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் புதுக் குடியிருப்பு பிரதேச செயலர் செ. தயானந்தா, தமிழீழபொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப் பொறுப்பாளர் சின்னண்ணை, கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் வி.அருள், கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறையைச் சேர்ந்த தேவா, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பிரதேசப் பொறுப்பாளர் நர்மதா, சமூக பொருளாதார வளர்ச்சி நிறுவனப் பொறுப்பாளர் யூட், விவசாயத் திணைக்கள புதுக்குடியிருப்பு பிரதேச விவசாய போதனாசிரியர் விஜயன் மற்றும் ஐந்து கிராமங்களைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர்கள், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர்கள், கமக்கார அமைப்பினர், தேசிய எழுச்சிப் பேரவையினர், மக்கள் செயலணிக்குழு உறுப்பினர்கள், பொது அமைப்புப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். நிகழ்வில் கருத்துரைகளை சின்னண்ணை, யூட், சோழநிலவன் ஆகியோர் வழங்கினார்கள். (46)

## "மைற்ஸ் பீடை" தாக்கத்தைக் கட்டுப்படுத்த விவசாய போதனாசிரியர் ஆலோசனை

(முல்லைத்தீவு)

குமுழமுனை விவசாயப் போதனாசிரியர் பிரிவில் தண்ணிமுறிப்பு பெரிய நீர்ப்பாசனக் குளத்தின் கீழான ஒன்பதாம், 12 ஆம் கண்ட வயல்களில், 'மைற்ஸ்' எனும் பீடையின் தாக்கம் கண்டறியப்பட்டுள்ளது.

இது சிவப்பு, செம்மஞ்சள் நிறமான பேன், உண்ணி போன்ற இந்த நுண்ணுயிர் ஒவ்வொரு தாவரத்திலும் நூற்றுக்கணக்கான எண்ணிக்கையில் இலைகளின் பின்புறத்தில் காணப்படும். இதன் தாக்கத்தால் இலை நரம்புகள் தவிர்ந்த ஏனைய இடங்கள் மஞ்சள் நிறமாகக் காணப்படும்.

இதனைக் கட்டுப்படுத்த அக்சிசுயசொக்ஸ் 10% என்ற இரசாயனம் அடங்கிய பீடை நாசினியைப் பயன்படுத்துமாறும், மேலதிக விபரங்களுக்கு விவசாயப் போதனாசிரியர்களை அணுகுமாறும் குமுழமுனை விவசாயப் போதனாசிரியர் தெரிவிக்கிறார். (20)

## விளையாட்டு உபகரணம் வழங்கல்

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தினால் மாயவனூர் பொதுமண்டபத்தில் கடந்த வியாழனன்று மாலைநேர கல்வியில் ஈடுபடும் மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன. மேற்படி நிகழ்வு ஊரக வளர்ச்சித் தலைவர் கரன் தலைமையில் ஆரம்பமானது. தொடர்ந்து விளையாட்டின் முக்கியத்துவம், உபகரணங்களின் பாவனை தொடர்பான கருத்துக்களை கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்தி நிறுவனப் பணிப்பாளர் மா.வினோ, கிராம அலுவலர் ரூபசிங்கம் ஆகியோர் கருத்துரை வழங்கியதுடன், விளையாட்டு உபகரணங்களை கிராம அலுவலர் மாணவர்களிடம் வழங்கியதுடன், இந்நிகழ்வில் மாதர்சங்க உறுப்பினர், மாணவர்கள், மாலைநேரக்கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடும் ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (தீ,லோ)

## அணைக்கட்டு புனரமைப்பு

(மல்லாவி)


துணுக்காய் பிரதேச செயலர் பரிவுக்குட்பட்ட பின் தங்கிய கிராமமான தேறாங்கண்டல் கிராமத்தில் அமைந்த கரம்பைக்குள அணைக் கட்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நிதியுதவியில் புனரமைக்கப்பட்டு வருகின்றது. மேற்படி கரம்பைக்குளம் அணைக்கட்டு புனரமைப்புப் பணிகள் கடந்த ஆனி மாதம் 20ஆம் திகதி கிராம மக்களின் ஒத்துழைப்புடன் வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்பட்டு தற்போது நிறைவு பெறும் நிலையிலுள்ளது. இதற்கான மனித வலுவில் 70இற்கு மேற்பட்ட பயனாளிகள் தினமும் இப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

குளக்கட்டு புனரமைப்பு முடிந்தால் சுமார் 200 ஏக்கர் நிலப்பரப்பில் இம்முறை நெற் செய்கையை மேற்கொள்ள முடியும் என மக்கள் தெரிவிக்கின்றனர். அத்துடன் இக்குளத்தின் மூலம் விவசாயத்தை ஊக்குவிப்பதற்காகவும், விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகளும் இந்நிறுவனத்தினால் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (24)

## கணினிப்பயிற்சியை முடித்த 54 பேருக்கு சான்றிதழ்

விசுவமடுவில் அமைந்துள்ள சிக்மா கணினிப்பியிற்சி நிலையத்தில் கணினிப்பயிற்சி பெற்ற மாணவர்54 பேருக்கு ஒரு வருட கற்கை நெறி முடிந்து சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை 4.00 மணிக்கு விசுவமடு மகாவித்தியால யத்தில் நடைபெற்றது.. கணினிப் பயிற்சி நிலைய முதல்வர் செ. சுதர் சன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மங்கல விளக்கினை விசு வமடு கிழக்கு கிராம அலுவலர் செல்வநாயகமும், விசுவமடு கமக்கார அமைப்பு தலைவர் செல்வரத்தினமும் ஏற்றிவைத்தனர். நிகழ்வில் கருத்துரைகளை பிரதம விருந்தின ரான கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த. குருகுலராஜாவும் மற் றும் பலரும் வழங்கினர்.

கணினிப்பயிற்சியை முடித்த 22 சிறுவர்களுக்கும் 32 வளர்ந்தவர்களுக்குமான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. நிகழ்வில் விசுவமடு மகாவித்தியாலய அதிபர், பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (46)



புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன்விழாவைச் சிறப்பிக்கும் முகமாக லண்டனில் உள்ள புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தால், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள கலாச்சார மண்டபத்தின் முகப்புத் தோற்றத்தை படத்தில் காணலாம். இம் மண்டபத்தின் திறப்புவிழா எதிர்வரும் பத்தாம் திகதி இடம்பெறவுள்ளது. (படம்-க.தவரடணம்)

# யாழ். பல்கலை மா.ஒன்றியம், சிகையலங்கரிப்பாளர் சங்கம் இராணுவத்தின் காட்டுமிராண்டித்தனத்திற்கு கண்டனம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் இணுவில் பகுதியில் கொலைவெறிபிடித்த சிறிலங்கா இராணுவத்தால் அப்பாவி இளைஞன் கொல்லப்பட்ட சம்பவத்தை யாழ். பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோமென இணுவில் சம்பவம் குறித்து யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கை தெரிவித்துள்ளது.**

இராணுவத்தினர் தமிழ்மக்கள் மீது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு செயலாகவே கருதுகின்றோம். பெருமளவு மக்கள் வாழ்கின்ற நகரப் பகுதியில் மக்களை விரட்டுகின்ற நோக்கோடு பட்டப்பகலில் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதலானது தற்போதைய போர் நிறுத்த உடன்படிக்கையை அப்பட்டமாக மீறுகின்ற ஒரு செயலாகவே இருக்கின்றது.

இவ்வாறான இராணுவத்தின் திட்டமிட்ட நயவஞ்சகத்தனமான தாக்குதல்களையும் அடாவடித்தனங்களையும் பொறுத்துக்கொள்ள முடியாது. தொடர்ந்தும் இராணுவத்தினர் திட்டமிட்டு நிராயுதபாணிகளான போராளிகள் மீதும், அப்பாவிப்பொது மக்கள் மீதும் மேற்கொள்ளப்பட்டு வரும் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலின் ஒரு அங்கமாகவே இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

எனவே இனியும் பொதுமக்களையும், போராளிகளையும் இழப்பதற்கு நாம் தயாராக இல்லை. வெகுவிரைவில் மக்கள் திரண்டெழுந்து இராணுவத்தின் காட்டுமிராண்டித்தனத்திற்கு தகுந்த பதிலடியைத் தருவார்கள்.

இராணுவத்தின் காடைத்தனத்தினால் உயிரிழந்த இளைஞனுக்கு எமது அஞ்சலியைச் செலுத்துவதோடு அவரது உறவுகளுக்கும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம் என அந்தக் கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் ஒன்றியம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் சிறிலங்கா இராணுவத்தின் அடாவடித்தனமான செயலுக்கு இன்னுமொரு இளைஞரான இணுவில் குமரன் சிகை அலங்கரிப்பு நிலையத்தில் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஜெயசீலன் சாந்த ரூபன் என்பவர் பலியாகியுள்ளார். இதை சிகையலங்கரிப்பு சங்கங்களின் ஒன்றியம் வன்மையாகக் கணடிக்கிறது.

இப்படுகொலையை மேற்கொண்ட இராணுவத்தினர் மீது கடும் நடவடிக்கையெடுத்து நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும் நீதி கிடைக்காவிட்டால் இராணுவத்துக்கு எதிராக மக்கள் போராடுவோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(சு)

# வர்த்தக நிலையங்களில் கடன்வாங்கும் படையினர் திருப்பிக் கொடுப்பதில்லை

## -யாழ்.வர்த்தகர்கள் கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் சிறிலங்காப் பொலிசார் மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் சிகரட்,பீடி மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் பலவற்றை வாங்கிவிட்டு பணம் செலுத்தாது செல்வதாக குற்றம் சுமத்தப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் கிராமப்புற வர்த்தக நிலையங்கள் பலவற்றிலேயே இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வர்த்தக நிலையங்களுக்கு அண்மையில் காவலரண்களை அமைத்து நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினர் மற்றும் பொலிசார் அடிக்கடி வர்த்தக நிலையங்களுக்குச் சென்று சிகரட், பீடி மற்றும் பொருட்களை வாங்கிவிட்டு சிறுதொகைப்பணத்தைக் கொடுப்பதுடன், மீதியைக் கடனாக எழுதிவைக்குமாறும் கூறிவிட்டுச் செல்கின்றனர்.

இவ்வாறு நடந்துகொள்ளும் இராணுவத்தினரும், பொலிசாரும் நீண்ட விடுமுறைகளில் வீடுகளுக்குச் செல்வதும்-வேறு இடங்களுக்கு மாற்றம் பெற்றுச் செல்வதுமாக மறைந்து விடுகின்றனராம். ஏற்கனவே வைக்கப்பட்ட கடனை மீளளிக்குமாறு புதிதாகக் கடைக்குச்செல்லும் படையினரைக் கேட்டால் அதை உரியவர்களிடமே கேட்டுவாங்குங்கள் என்று தெரிவிக்கின்றனர்.(37)

# சுனாமியினால் படகுகளை இழந்தவர்களுக்கு மேலும் 24 படகுகள் வழங்கப்பட்டுள்ளது

வடமராட்சி கிழக்கில் சுனாமியினால் படகுகளை இழந்த கடற்றொழிலாளர்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அலுவலகத்தில் வைத்து இருபத்து நான்கு (24) படகுகள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கை அங்கிலிக்கன் திருச்சபையினரே இப்படகுகளை வழங்கியுள்ளனர். இந்நிகழ்விற்கு க.தொ.கூ. சங்கங்களின் சமாசத் தலைவர் மு.தங்க வேலு தலைமை தாங்கினார். இந்நிகழ்வின்போது சிறப்புரையினை இலங்கை அங்கிரிக்கன் திருச்சபை கிளிநொச்சி பங்கு தந்தை சாள்ஸ் டேவிற் நிகழ்த்தினார்.

# யாழ். இல் நிலவிய அசாதாரண சூழல் ஓரளவு வழமைக்குத் திரும்புகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் இணுவில் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் மற்றும் பொலிஸ் உயரதிகாரியின் கொலை என்பவற்றையடுத்து யாழ்.குடாநாட்டில் நிலவி வந்த அசாதாரண சூழல் நேற்றுமுன் தினம் முதல் ஓரளவு விலகி இயல்பு நிலை க்கு திரும்பிக்கொண்டிருக்கிறது.

யாழ்.மாநகரம் உள்ளிட்ட பிரதான நகரங்கள் அனைத்தும் நேற்றுமுன்தினம் முதல் இயல்புநிலைக்கு திரும்பிக் கொண்டி ருக்கிறது. அரச, தனியார் வங்கிகள், வர்த்தக நிலையங்கள் முற்றாக திறந் திருந்தன. போக்குவரத்து சேவைகள் இயல்புக்கு திரும்பிக்கொண்டிருக் கிறது.

குறிப்பாக குடாநாட்டிற்கு வெளியேயான ஏ-9 வீதியூடான போக்குவரத்துக்கள் மீள ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அத்துடன் துண்டிக்கப்பட்டிருந்த தீவுப் பகுதிகளிற்கான போக்குவரத்தும் சீரடைந்திருந்தது.

இதேவேளை அசம்பாவிதம் இடம்பெற்ற இணுவிலின் காங்கேசன்துறை வீதியை அண்டி அச்சங்காரணமாக இடம்பெயர்ந்திருந்த குடும்பங்கள் பலவும் மீளக்குடியமர்ந்துள்ளன.

இதனிடையே யாழ். பொலிஸ் நிலையம் முன்பாகவுள்ள மணிக்கூட்டுக் கோபுரவீதி உள்ளிட்ட பொலிஸ் நிலையத்தை அண்டிய வீதிகள் முட்கம்பிகள் கொண்டு மூடப்பட்டிருந்த போதும், அவை நேற்று முன்தினம் விலக்கப் பட்டிருந்தது. எனினும் மணிக்கூட்டுக் கோபுர வீதி ஒருவழிப்பாதையாக மட்டும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குடாநாட்டிற்கான திடீர்விஜயமொன்றை மேற்கொண்டு பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்ணாண்டோ நேற்று முன்தினம் வருகை தந்து திரும்பியுள்ளார். அவர் காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள வடபிராந்திய பொலிஸ் தலைமையகத்தில் விசேட கூட்டமொன்றை நடாத்தியுள்ளார். இச்சந்திப்பிற்கு யாழ். மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலைய அதிகாரிகள் அழைக்கப்பட்டிருந்தனர். (27,33)

# செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த உற்சவம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் பகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதங்களையடுத்து குடாநாடு தழுவிய ரீதியில் உத்தியோகப் பற்றற்ற ஊரடங்குச் சட்டம் வெள்ளிக்கிழமை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் அன்று வரலாற்றுப் புகழ் மிக்க செல்வச்சந்நிதி ஆலயம் வருடாந்த உற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

ஊரடங்குச் சட்டத்தையும் மீறி ஆலயத்தில் வெள்ளிக்கிழமை திரண்ட ஆயிரத்திற்கும் அதிகமான பக்தர்கள் கொடியேற்ற திருவிழாவில் கலந்து கொண்டனர்.

எனினும் செல்வச்சந்நிதி ஆலயத்தை அண்டிய தொண்டமனாறு, வல்வெட்டித்துறை மற்றும் உடுப்பிட்டி, அச்சுவேலி பகுதிகளைச் சேர்ந்த பக்தர்களே கொடியேற்றத் திருவிழாவில் கலந்து கொண்டனர். தூர இடங்களைச் சேர்ந்த பக்தர்கள் பலரும் பிரதான வீதிகளில் வைத்து படையினராலும், பொலிசாராலும் திருப்பி அனுப்பப்பட்டிருந்தனர்.

கடந்த வெள்ளி முதல் எதிர்வரும் 15 தினங்களிற்கு இடம்பெறும் வருடாந்த உற்சவத்தில் 18 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், அடுத்த நாளான 19 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

இவ்வாலயம் பலாலி உயர்பாதுகாப்பு வலயத்தின் கிழக்கு எல்லையாக அமைந்துள்ள தொண்டமனாறு கடல்நீரேரிப் பக்கமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பௌதிக வளக்குறைவுடன் முள்ளியவளைப் பொது நூலகம்

முள்ளியவளைபிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்டபொதுநூலகம் பௌதிகவளக்குறைவுடன் இயங்கி வருவதால் வாசகர்கள் அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

மேற்படி பொதுநூலகம் தற்காலிக ஓட்டுக்கொட்டகையில் இயங்கி வருகின்றது.நிலம் மணலாகவும், சுற்றுப் பகுதி மறைப்புகளின்றியும் காணப்படுவதுடன் கூரை ஓடுகளும் உடைந்த நிலையிலுள்ளன. மேற்படி நூலகம் ஒரு நிரந்தர கட்டத்தில்சகல வசதியுடன் இயங்க வேண்டும் என வாசகர்கள் எதிர்பார்க்கின்றனர். (ஆ)

# உதவிக்கொடுப்பனவு இல்லை தொண்டர் தாதியர் கவலை

(முள்ளியவளை)

முள்ளியவளை மத்திய மருந்தகத்தில் கடமை ஆற்றிவரும் நான்கு தொண்டர் தாதியர்களுக்கு எதுவித உதவிக்கொடுப்பனவும் வழங்கப்படுவதில்லை என தொண்டர் தாதியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேற்படி மருத்துவமனையில் தற்போது நான்கு தொண்டர் தாதியர்களும் ஒருநியமன தாதியருமே கடமையாற்றி வருகின்றனர்.

மேற்படி தொண்டர் தாதியர்களுக்கு கியூடெக் நிறுவனமும், நலன் புரிநிலையமும் சிறுதொகை உதவிக்கொடுப்பனவு வழங்கி வந்ததாகவும் அவை இடையில் நிறுத்தப்பட்டு சுமார் ஒருவருடமாக எதுவித உதவிக் கொடுப்பனவும் இன்றி கடமையாற்றி வருவதாகவும் தெரிவித்தனர்.

மேற்படி தொண்டர் தாதியர்களின் சேவையே மேற்படி மருந்தகத்தில் கூடியளவாகவுள்ளது. இவர்களுக்கான உதவிக்கொடுப்பனவு வழங்கப்படாமை தொடருமானால் இவர்கள் தமது வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு இடைவிலக நேரிடும். இதனால் மருந்தகத்தின் சேவையில் பாரிய பின்னடைவு ஏற்படும். இவர்களுக்கு உத விக்கொடுப்பனவு வழங்கப்பட சம்பந் தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பதுடன் இவர்களுக்கான நியமனத்திலும் கவனம் எடுத்து மருந்தகத்தின் வளர்ச்சிக்கு உதவி செய்ய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (ஆ)

# வற்றாப்பளைப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை

(முள்ளியவளை)

முள்ளியவளை - வற்றாப்பளைப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து காணப்படுகின்றது.

வற்றாப்பளை பொதுச்சந்தை, வற்றாப்பளை பிரதான வீதிகள், பொது இடங்கள் என்பவற்றில் பெருமளவான கட்டாக்காலி நாய்கள் அலைந்து திரிவதால் வீதிப்போக்கு வரவில் விபத்துக்கள் ஏற்பட்டு வருவதுடன் பொதுச் சந்தை கட்டாக்காலி நாய்களினால் சுகாதார சீர்கேடாக காணப்படுகின்றது.

மேற்படி பகுதியில் பல காலமாக நாய் அழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையால் வீதியால் பயணிப்போரை கட்டாக்காலி நாய்கள் கடித்து காயப்படுத்தியும் வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# முள்ளியவளை-மத்தியமருந்தகத்தில் கடந்த மாதம் 514 பேர் சிகிச்சை

(முள்ளியவளை)

முள்ளியவளை அரசினர் மத்திய மருந்தகத்தில் கடந்த ஆடி மாதம் 514 நோயாளர் சிகிச்சை பெற்றுள்ளதாக மருந்தக நிலவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கை விபரமாகத் தெரிவிக்கையில், வெளி நோயாளர் பிரிவில் 284 பேரும், சாதாரண காய்ச்சலுக்கு 114 பேரும், சிறுசத்திர சிகிச்சைக்கு 20 பேரும் ,சிரங்கிற்கு 15பேரும், குருதிச்சோகைக்கு 14 பேரும், வயிற்றோட்டத்திற்கு 03 பேரும் சிகிச்சை பெற்றுள்ளதுடன்

மேற்படி அரசினர் மத்திய மருந்தக மகப்பேற்றுமனையில் கடந்தமாதம் மகப்பேற்றுக்காக கர்ப்பிணித்தாய்மார் அனுமதிக்கப்பட்டு அதில் 24 சிசுப்பிறப்பு நிகழ்ந்துள்ளதாக அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி மருந்தகத்தில் முல்லை மாவட்ட தாய் சேய் நலன் காப்புத்திட்ட வைத்திய அதிகாரி க. சுதர்சன் சில மணித்தியாலயங்களில் மனிதாபிமானரீயில் நோயாளரைப்பார்வையிட்டு வருகின்றார்.

மேற்படி வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்திய அதிகாரி நியமிக்கப்பட வேண்டும் என மக்கள் கோரிவருகின்றனர். (ஆ)

# உளவள மேம்பாட்டு பயிற்சி

(அலுவலக செய்தியாளர்)

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினரும், யுனிசெப் நிறுவனத்தினரும் இணைந்து யுனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உளவள மேம்பாட்டை மேற்கொள்ளும் தொண்டர்களுக்கான உளவள மேம்பாட்டு பயிற்சி நெறி ஒன்றினை அண்மையில் நடாத்தியுள்ளனர்.

இந்த உளவள மேம்பாட்டு பயிற்சி நெறியில் நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத் தொண்டர்களும், திலீபன் மருத்துவமனை தொண்டர்களும், தமிழ்புனர்வாழ்வுக்கழகத் தொண்டர்களுமாக மொத்தம் 30 உளவள தொண்டர்கள் பங்குபற்றியுள்ளனர். இப்பயிற்சி நெறியினை சிஸ்ரர் கிருஸ்ரபேல் அவர்களும் அவருடைய பணியாளர்கள் சிலரும் இணைந்து நடாத்தியுள்ளனர். (கு)

# நன்றிக்கடன் தீர்க்கும் மகிந்தவின் முயற்சி கைகூடுமா?

ராஜபக்ஷக்கள் என்றும் ராஜபரம்பரையினரே. கிருவாபத்து வளவின் ராஜபக்ஷக்களும் அவ்வாறானவர்களே. இவர்களை மன்னர்களாக தெரிவு செய்தவர்கள் ஹொரகொல்ல வளவின் பண்டார நாயக்கர்களாவர். அன்றிலிருந்து ராஜபக்ஷக்களும் ஹொரகொல்ல வளவினரும் ஒன்றாகிவிட்டனர்.

இந்த ராஜபக்ஷ வளவினர் பண்டாரநாயக்க வளவினருக்கு சேவை செய்ய தீர்மானித்தது அவர்களுடன் இணைந்த ரத்வத்த குடும்பத்தினரைப் பாதுகாக்க வாகும். 1942 ஆம் ஆண்டு எஸ் டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கவின் மாமனாகிய பாண்ஸ் ரத்வத்த பலாங்கொட தொகுதியின் இடைத்தேர்தலில் போட்டியிட ஆரம்பித்ததிலிருந்து இந்த ரத்வத்த குடும்பத்தை ராஜபக்ஷ வளவினர் பாதுகாக்க ஆரம்பித்தனர்.

இவர்கள் இணைந்தது வாணிபத்தில் ஈடுபட்டுப் பணத்தைச் சம்பாதித்து பெரும்புகழை ஈட்டிய சேனநாயக்க, கொத்தலாவல, ஆட்டிகல (ஐ.தே.க) குடும்பத்தினரின் கூட்டை முறியடிப்பதற்காகும். எனினும் அதில் வெற்றி பெற்றவர்கள் குடும்பக் கூட்டுக் கட்சியான ஐ.தே கட்சியினரே.


இதன் காரணமாக குடும்ப இணைப்பை முறியடித்து சவால் விட முடியாது என உணர்ந்த ராஜபக்ஷ வளவினர் 1947ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐ.தே. கட்சியுடன் இணையத் தீர்மானித்தனர். அதனைத் தோற்றுவித்தது ஐ.தே கட்சி என்பதாலேயே அக்கட்சி ஐக்கிய தேசியக்கட்சி எனப்பட்டது. எனினும் குடும்பக் கட்சியில் தனக்கு பிரதமர் பதவி கிடைக்க வில்லை என்ற காரணத்தால் எஸ்.டபிள்யு ஆர் டி பண்டாநாயக்க அதிலிருந்து பிரிந்து செல்ல முடிவு செய்தார். அப்போது அவருக்குப் பக்கபலமாக இருந்தவர் டி.ஏ ராஜபக்ஷ என்பவராகும். அதன் விளைவால் 1956 ஆம் ஆண்டு வளவுகளின் கூட்டு ஒன்று சேர்ந்து சிறிலங்கா சுதந்திரக்கட்சியை உருவாக்கி தேர்தலிலும் வெற்றி பெற்றது. "ராஜபக்ஷக்கள் அவர்களது சேவையாளராகினர். பண்டார நாயக்க கொலையுண்ட பின்னர் சிறிமாவோ பண்டாரநாயக்கவை வளவுகளின் கூட்டணி பிரதமராக தேர்ந்தெடுத்தது டி.ஏ ராஜபக்ஷவின் மறைவுக்குப் பின்னர் பண்டார நாயக்கர்களுக்கு சேவைபுரிய வந்தவர் ஜோர்ஜ் ராஜபக்ஷ என்பவராவார்.

பண்டார நாயக்கர்கள் கம்பகா மாவட்டத்தில் தம்மை ஒருவரும் வீழ்த்த முடியாத அளவுக்கு பலம் பெற்றிருந்தபோது ராஜபக்ஷக்கள் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தமது ஆதிக்கத்தை செலுத்தி வந்தனர். இதனால் கம்பகா மாவட்டத்தின் தேர்தல் தொகுதிகளை சிறிமாவோ, பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க, எஸ். டி பண்டார நாயக்க போன்றோர் பங்கிட்டுக் கொண்டது போன்று அம்பாந்தோட்டை மாவட்டத்தேர்தல் தொகுதிகளை ஜோர்ஜ் ராஜபக்ஷ, லக்ஷ்மன் ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ ஆகியோர் பங்கிட்டுக் கொண்டனர்.

1970 ஆம் ஆண்டு பண்டார நாயக்க வம்சத்தின் மகுடம் சூடும் வாரிசான அநுரா பண்டாரநாயக்கவை அரசியலுக்கு கொண்டுவர ராஜபக்ஷ வம்சத்தின் இளவரசர் ஒருவர் தேவைப்பட்டார். அதற்காக சிறிமாவோவால் தேர்ந்தெடுக்கப் பட்டவர் மகிந்த ராஜபக்ஷ என்ற அன்றைய இளவரசராவார். அவர் தெரிவு செய்யப்பட்ட சமயம் 1970 ஆண்டு அம்பாந்தோட்டை தேர்தல் தொகுதி வேட்பாளராக அறிவிக்கப் பட்டிருந்தவர் ஜோசப் ராஜபக்ஷ வாவார். எனவே இந்த இரு ராஜபக்ஷக்களும் 1970 ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் அம்பாந்தோட்டை மாவட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டு பலமுள்ளவர்களாக இருந்தனர். இவர்கள் 1970 முதல் 1977 வரை சிறிலங்கா சுதந்திரக் கட்சியை எவ்வாறு பாதுகாத்தார்கள் என்றால் 1971 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜே.வி.பி கிளர்ச்சியின் போதும் 1970 இல் வெற்றிபெற்ற கட்சி மேலும் இரு ஆண்டுகளுக்கு ஆட்சி நடத்த முயன்றபோதும் பத்திரிகைக் காரியாலயங்களுக்கு முத்திரையிட்டு மூடப்பட்டபோதும் மகிந்த ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையின்போதும் நடந்து கொண்ட விதத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

1976 ஆம் ஆண்டு ஜோர்ஜ் ராஜபக்ஷ காலமானதும் வெற்றிடமான முல்கிரிகல தொகுதிக்கு வேட்பாளர் ஒருவரை நியமிக்கும் விடயத்தில் வேட்பாளர் நியமனம் ராஜபக்ஷக்களில் ஒருவரிடம் இருந்து செல்லக்கூடாது என்பதில் கவனமாக இருந்தனர். அதன்படி லக்ஷ்மன் ராஜபக்ஷ போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது பண்டாரநாயக்க வம்சத்தின் முடிக்குரியவரான அநுர பண்டார நாயக்கவும் ராஜ பக்ஷ வளவின் அரச குமாரர்களென வர்ணிக்கப்படும் மகிந்தவும், அவரது சகோதரருமான பசில் ராஜபக்ஷவும் போட்டியிட்டனர். எனினும் 1977இல் வரலாற்றில் முதற் தடவையாக குடும்பக் கூட்டுக் கட்சியான ஐ.தே கட்சி அம்பாந் தோட்டையில் ராஜ பக்ஷக் களை வெற்றி கண்டது. அத னால் அப் போதைய பாரா ளுமன்றில் ஒரு ராஜபக்ஷவேனும் அங்கம் வகிக்க முடியவில்லை அவர்கள் மட்டுமன்றி பண்டாரநாயக்கர் களையும் ஜே.ஆர் துடைத்து எறிந்துவிட்டார்.



நன்றி டெய்லிமிரர்

சிறிமாவோவின் குடியுரிமை பறிக்கப்பட்டது. அதனால் வளவுக் கூட்டணி அநாதையானது. அத்துடன் 1982 ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தலின்போது அக்கூட்டணி பிளவுபட்டது. எனினும் பண்டாரநாயக்க பரம்பரையின் இரண்டாவது மகளான சந்திரிகா ராஜபக்ஷ வளவின் ஜோர்ஜ் ராஜபக்ஷவின் மகளான நிருபமாவுடன் இணைந்து கொப்பேகடுவ பரம்பரையில் ஒரு அபேட்சகரை தெரிவு செய்தனர். அதே போன்று டி.ஏ ராஜபக்ஷவின் புத்திரர்களான மகிந்த ராஜபக்ஷவும் பசில் ராஜபக்ஷவும் இணைந்து அநுராவை வேட்பாளராக முன் வைத்தனர். இதில் கொப்பேகடுவ வேட்பாளராகத் தெரிவுசெய்யப் பட்டார். அநுரா பண்டரா நாயக்க அப் போது அந்த முயற் சியில் தோல்வியடைந்தார். இதனால் இளம் ராஜபக்ஷக்களின் செல்வாக்கு குறைந்துவிட்டது கொப்பேகடுவவை அநுரா ஒரு ஒப்பந்தக்காரர் என்றார். இதனால் கொப்பேகடுவவின் சனாதிபதித் தேர்தல் பிரச்சாரப்பணி முதல் அனைத்துப் பணிகளையும் அநுரா கைவிட்டார். பசில் ஐ.தே கட்சி சிறிலங்கா சுதந்திரக்கட்சி இணைந்த தேசிய அரசாங்கம் பற்றி பிரேரித்தார். இறுதியில் கொப்பேகடுவ தோல்வி கண்டார்.நிருபமா கொப்பேகடுவவின் வெற்றிக்காக பிரச்சாரம் செய்தார். அதனால் ராஜபக்ஷக்களின் கோட்டையான முல்கிரிகல தொகுதியில் அவர் வெற்றி பெற்றார்.

எனினும் முல்கிரிகல தொகு தியில் தோல்வியடைந்ததால் அங்கு இடைத் தேர்தல் ஒன்றை நடத்த ஜே.ஆர் தீர்மானித்தார் அதன்படி அவர் ராஜபக்ஷ வளவினருக்கு சவால் விடக்கூடிய வரான ஆனந்த குலரத்னவை வேட்பாளராக நியமித்தார். அதில் வெற்றியும் கண்டார்.

1982 ஆம் ஆண்டு நடைபெற்ற சர்வசன வாக்கெடுப்பின்போது பண்டாரநாயக்கர்களின் கோட்டையான அத்தனகலை தேர்தல் தொகுதியை வலிந்து வெற்றி கொண்டமை பண்டாரநாயக்கர்களை தலைகுனிய வைத்த சம்பவமாகும். இதனால் அடுத்துவந்த தேர்தலில் எவ்வாறேனும் ஐ.தே.கட்சியை தோல்வியுறச் செய்து கூட்டை உடைக்க தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தை முறியடிக்க குடும்பக்கூட்டு ஐ.தே.கட்சியில் கொழும்பு வாழைத்தோட்டப் பகுதியில் இருந்து வந்து ஒருவர் இணைந்தார். அவர் ரணசிங்க பிரேமதாசா ஆவார். சிறுகுடும்பத்தைச் சேர்ந்த அவருக்கு சனாதிபதி வேட்பாளர் நியமனம் வழங்கப்பட்டது. பிரேமதாசா இந்த வளவுக்காரரின் கூட்டு அரசியலை இல்லாதொழிக்க தொழிற்கட்சியில் பிரவேசித்தபோதே கங்கணம் கட்டினார். அக்கட்சியிலிருந்து நிறை வேற்ற முடியாதென உணர்ந்த பின்னரேயே ஐ.தே.கட்சியில் இணைந்தார். ஐ.தே.கட்சி அவருக்கு பிரதித் தலைவர் அந்தஸ்தை வழங்கியது. பிரதமராக்கியது. 1988இல் குடும்ப கூட்டு கட்சியான ஐ.தே.கட்சி சனாதிபதி வேட்பாளர் அந்தஸ்தையும் கட்சியையும் பொறுப்பளித்தது.

அப்போது தான் வருவது வளவுகார அரசியலை ஒழிக்கவே என பிரேமதாசா தெரிவித்ததுடன் அதனால் பண்டாரநாயக்கர்களும், ராஜபக்ஷக்களும் தன்னை எதுவும் செய்வார்கள் என்றும் குறிப்பிட்டார்.

இவரை ஒழிப்பதற்கு பண்டார நாயக்கர்களும் ராஜபக்ஷக்களும் காலையிலிருந்து மாலைவரை சூழ்ச்சி செய்தனர். இவற்றையெல்லாம் நிர்மூலமாக்கி பிரேமதாசா சனாதிபதியானார்.

இதற்கிடையில் வளவு இராச்சியத்துக்கு தலைமை வகித்த சிறிமாவும் நோய்வாய்ப்பட்டார். அதன்பின் வளவுக்காரர்களின் கட்சித்தலைமைக்கு சந்திரிகாவும், அநுராவும் பிரிந்து சென்று போரிட்டனர் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பிரேமதாசா வளவுக் கூட்டை சிதைத்து விடக்கூடும் என எண்ணி மகிந்த ராஜபக்ஷ தனது பரம்பரையையும், பண்டாரநாயக்க பரம்பரையையும் பாதுகாக்க முன்வந்தார்.

அதன் முதற்படியாக கொழும்பிலிருந்து கதிர்காமத்துக்கு பாதயாத்திரை மேற்கொண்டு தேங்காய் உடைத்தார். அதன் பின் மக்கள் கோஷங்களை முன்வைத்தார். உலக நாடுகளுக்குச் சென்று பிரேமதாசாவுக்கு எதிராக பிரச்சாரம் மேற்கொண்டார்.

எனினும் பிரேமதாசாவை அழிக்க அவரால் முடியவில்லை. பிரேமதாசா குண்டுவெடிப்பில் பலியான பின்னர் வளவுக்கூட்டு கலாச்சாரத்தை மீண்டும் முன்னெடுத்தார். கட்சித் தலைமைக்கு அநுரா பொருத்தமற்று இருந்ததால் சந்திரிகாவுக்கு தலைமைப் பதவி வழங்கப்பட்டது. அநுரா ஐ.தே.கட்சியில் இணைந்தார். அநுராவுக்கு மகுடம் சூட்டநினைத்த மகிந்த அதன்பின்னர் அவர் பின்னால் செல்லவில்லை.

எவ்வாறேனும் 1994ஆம் ஆண்டு முதல் ராஜபக்ஷ பண்டார நாயக்கர் வளவுக்காரர் கூட்டு தலைதூக்கியது. இந்த வளவுக் கலாச்சாரத்தால் தனக்கு ஒரு இடம்கிடைக்காது எனக்கருதிய எஸ்.பி திசாநாயக்க கட்சியிலிருந்து விலகினார். இதனை சந்திரிகாவும் புரிந்துவைத் திருந்தார். அவர் 2004ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் பின்னர் மகிந்த ராஜபக்ஷவுக்கு பிரதமர் பதவி வழங்கியது காரணத்துடனேயே, 2004ஆம் ஆண்டு தேர்தலின் பின்னர் ஜே.வி.பி யினரின் கட்டுப்பாட்டுக் குள் கட்சிவந்துவிடும் என்றும் அதனைத்தவிர்க்கவும் கட்சியைப் பாதுகாப்பவர் மகிந்த ராஜபக்ஷ மட்டுமே என சந்திரிகா கருதியமையே அக்காரணமாகும்.

**உப்புல் ஜோசப் பர்னாந்து**
**(லங்காதீப)**
**தமிழில் வடிவேல்**

அதேபோன்று இன்று விரும்பியோ விரும்பாமலோ மகிந்தவுக்கு சனாதிபதி வேட்பாளர் அந்தஸ்சை சந்திரிகா வழங்கியுள்ளார். காரணம் ஐ.தே. கட்சிக் குடும்பக்கூட்டணியும் ஜே.வி.பி யும் இணைந்து பண்டாரநாயக்க வளவுக் கலாச்சாரத்தை அழித்துவிடலாம் என்ற பயத்தினாலாக இருக்கலாம் அதனை நிறைவேற்றி அநுராவையும் பிரதமராக்கி தனது கடனை மகிந்த தீர்த்துவிடுவாரா? என்பது இப்போது கூறமுடியாது.




## 28.07.2002
## 03.08.2005

### 28

➡ பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக கடந்த 30 வருடங்களாக இடம்பெற்று வந்த ஆயுதப்போராட்டம் கைவிடப்பட்டதாக அயர்லாந்து குடியரசு இராணுவம் அறிவிப்பு.

### 30

➡ சூடான் உதவி சனாதிபதியும் முன்னாள் தீவிரவாத இயக்கத் தலைவரு



மான ஜோன்கிராங் உகண்டாவில் இருந்து- சூடானுக்கு வந்து கொண் டிருந்தபோது உலங்கு வானூர்தி விபத்துக் குள்ளானதில் பலி.

➡ இருபத்தைந்து இலட்சம் மக்கள் உணவுப் பற்றாக்குறையை எதிர்கொண்டிருக் கும் மேற்கு ஆபிரிக்க நாடான நைகருக்கு தற்போது உணவுப் பங்கீடுகள் வந்து சேர்ந்த வண்ணமுள்ளன. உணவு விநியோக நிலை யங்களை இந்த விநியோகப் பொருட்கள் வந்தடைந்து கொண்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் உணவுத்திட்ட அதிகாரி கள் தெரிவித்தனர்.


➡ ஆக்கன்ஸாஸ்சின் தென்மேற்குப் பகுதியிலுள்ள நெடுஞ்சாலையில் பயணிகள் பேருந்தும், பிக்கப்ட்ரக் ஒன்றும் மோதியதில் 31 பேர் பலி.

### 31

➡ ஜப்பான்-தாய்வான் நாடுகளுக்கிடை யிலான வர்த்தக மற்றும் கைத்தொழில் சார் பொருட்களுக்கான தீர்வை தொடர்பாக பேச்சுக்கள் நடத்த ஜப்பான் பொருளாதார வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் தாய்வான் பயணம்.

➡ வட-கிழக்கு சீனாவில் நிறுத்திவைக்கப் பட்டிருந்த சரக்குரயில்வண்டியின் பின்புறத்தில் பயணிகள் ரயிலொன்று மோதி விபத்துக்குள்ளா னதில் ஆறு பேர் பலி; 30பேர் காயம்.

➡ஈராக்கின் தென்பகுதியில் இடம்பெற்ற கார்க்குண்டுத்தாக்குதலில் ஐந்து பேர் பலி.



➡தாய்வான் கடலில் பயணம் செய்து கொண்டிருந்த படகில் அதன் இயந்திர அறை யில் தீப்பிடித்ததில் அதில் பயணம் செய்த நான்கு பேர் பலி; இரண்டு பேர் காயம்.

➡எகிப்து சனாதிபதி ஹொஸ்னி முபாரக் மறுபடி சனாதிபதித்தேர்தலில் போட்டியிடு கின்றமையை எதிர்த்து தலைநகர் கெய்ரோவின் மத்திய பகுதியிலுள்ள பிரதான சதுக்கத்தில் எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

➡லெபனானின் புதிய பிரதமர் வுவாட்சினோரா டமஸ்கஸ் பயணம்.

➡ கொங்கோவில் மனித உரிமைகள் இயக்கச் செயலாளர்நாயகம் பஸ்கால்களுபுன் குலுகிபிம்பி இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுக்கொலை.

### 01

➡ சூடானின் உதவி சனாதிபதி ஜோன் கராங் உலங்குவானூர்தி விபத்தில் பலியானதை யடுத்து தலைநகர் காட்டுமில் இடம்பெற்ற வன்முறையில் 130 பேர் பலி.



➡ சவுதிய அரேபிய மன்னர் பஹ்த்தின் 84ஆவது வயதில் மரணம்.



➡பாகிஸ்தா னுக்கு முதற்கட்ட மாக 'ஏப் 16' போர் விமானங்கள் இரண்டு விற்பதற்கு அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் அனுமதி அளித்தார். பாகிஸ்தான் அணுவாயுதம் தயாரிப்பதைத் தொடர்ந்து அந்நாட்டுக்கு போர்விமானங்களை விற்பதற்கு அமெரிக்கா தடைவிதித்திருந்தது. 15 ஆண்டு காலம் இத்தடை அமுலில் இருந்தது.

➡ சீசெல்சின் சனாதிபதி ஜேம்ஸ்மைக் கேல் மூன்று நாள் விஜயமாக இந்தியா பயணம்.

➡ ஆப்கானிஸ்தானின் தென்மாகாண ஹெல்மண்டில் உள்ளூர் தேர்தல் ஊழியர் அப்துல்ரஹீம் சுட்டுக்கொலை.


### 02

➡ தென்சீனாவின் குவாங்பொங் மாகாணத்தின் ஜிங்டி எனும் நகரத்தில் சந்தைக் கட்டடம் சரிந்து விழுந்ததில் நான்கு பேர் பலி.

➡ இந்தோனேஷியாவின் கிழக்கு கடற்கரை பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவுகோலில் 5.9 புள்ளியாகப் பதிவானது.

### 03

➡ ஈராக்கின் வடமேற்குப் பகுதியில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் அமெரிக்க கடற்படையினர் 14 பேர் பலி.



➡ மௌரிடானியா என்ற ஆபிரிக்க நாட்டில் திடீர் இராணுவப் புரட்சி ஏற்பட்டது.

➡ பிரான்ஸ் நாட்டுக்கு சொந்தமான "ர்பஸ்" விமானம் கனடா நாட்டின் ரொரன்ரோ விமான நிலையத்தில் தரையிறங்க முற்பட்டபோது விமானத்தில் மின்னல் தாக்கியதில் விமானம் தீப்பிடித்து எரிந்தது. அதன்போது 309 பயணிகளும் உயிர் தப்பினர்.



➡ துருக்கியின் இஸ்தான்புல் நகரப் பகுதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் இருவர் பலி.

➡ ஈரானின் புதிய சனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட மஹ்மூத்அஹமட்நிஜாட் பதவி யேற்பு.

➡ சீனாவின் மத்திய ஹுனாம் மாகாணத் தில் உள்ள நிலக்கரிச் சுரங்கமொன்றில் எரிவாயுக் கசிவு ஏற்பட்டதில் 24 பேர் பலி.

# யுத்தம் ஓய்ந்துள்ள காலப்பகுதியிலாவது படுவான்கரை அபிவிருத்திக்கு முன்வருக!

## -பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் வேண்டுகோள்

(மட்டக்களப்பு)

கடந்த 30 வருடப் போரினால் மிகவும் பாதிக்கப்பட்ட பிரதேசமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான் கரைப் பிரதேசம் காட்சியளிக்கின்றது. ஒட்டுமொத்தமாக படுவான்கரைப் பகுதியை அபிவிருத்தி செய்வதன் மூலம்தான் மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் அபிவிருத்தி செய்ததாகக் கொள்ளப்படும் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் கடந்த வெள்ளிக் கிழமை வெல்லாவெளி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒழுங்கமைப்புக் கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போது தெரிவித்தார்.

பிரதேச செயலாளர் தலைமை யில் நடைபெற்ற இவ் ஒருங்கிணைப் புக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்; மட்டக் களப்பு மாவட்டத்தின் நகரப்பகுதிக ளில் இடம்பெறுகின்ற அபிவிருத்தித் திட்டங்களை படுவான்கரைப் பகுதிக் கும் விஸ்தரிக்கும்போதுதான் படு வான்கரையும் அபிவிருத்தியடைந் ததாகக் கருதப்படும். அதைத்தான் இங்கு வாழ்கின்ற மக்களும் எதிர் பார்க்கின்றனர்.

ஆனால் போராட்டத்தை சாட்டாக வைத்துக்கொண்டு கடந்த காலங் களில் சகல அபிவிருத்திகளும் படு வான்கரையில் புறக்கணிக்கப்படுகின் றது. இவ்வாறான நிலையில் யுத்தம் ஓய்ந்த இவ் வேளையில் கூட இவ்வா றான பகுதிகளுக்கு அபிவிருத்திகள் சென்றடைவது தடையாக இருக் கின்றது. இத் தடைகளின் மத்தியில் ஒரு சில அபிவிருத்தித் திட்டங்கள் நடைபெறுகின்றபோதும் திட்டங் களை நடைமுறைப்படுத்துவதற்கு அதிகாரிகள், ஒப்பந்தக்காரர்கள் வேலைத் திட்டங்களை சரிவரச் செய் வதற்கு முன்வர வேண்டும். நகரப் பகுதிகளிலுள்ள வீதிகளைப் பராமரிப் பதுபோன்று படுவான்கரை வீதிகள் பராமரிக்கப்படுவதில்லை. அதனால் தான் படுவான்கரைப்பகுதியிலுள்ள அநேகமான வீதிகள் இவ்வாறு மோசமாக இருப்பதற்குக் காரணமாகும்.

எனவே இவ்வாறன நிலை தொட ராதபடிக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனம் எடுத்து படுவான்கரை யையும், அங்கு வாழ்கின்ற மக்களின் அபிலாசைகளையும் நிறைவேற்ற வேண்டும் எனத் தெரிவித்தார்.

# பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் ஐந்திற்கு உலகவங்கி உதவி

வடக்குக் கிழக்கில் உலகவங்கி ஐந்து பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களை மேற்கொள்ளவிருக்கின்றது. அம்பாறை மாவட்டத்தில் கரைவாகுத்திட்டம், கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுத்திட்டம், மட்டக்களப்பு மாவட்டத்தில் உறுகாமத் திட்டம், திருகோணமலை மாவட்டத்தில் அல்லைத்திட்டம், மன்னார் மாவட்டத்தில் ஜயன்ற் திட்டம் ஆகியன அவையாகும்.

இவற்றால் 31 ஆயிரத்து 747 ஹெக்ரேயர் நிலங்கள் பயிர்ச்செய்கைக்கு உகந்ததாக மாற்றப்படும். அதனால் 30811 குடும்பங்கள் பயனடைவர். உலகவங்கியின் நிதியுதவியுடன் நியாப் திட்டத்தின் கீழ் மேற்கூறப்பட்ட திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கப்படவுள்ளது. உலக வங்கித்திட்டத்திற்கென 16 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்களை ஒதுக்கியுள்ளது.

மத்திய நீர்ப்பாசனத் திணைக்களம் இத் திட்டங்களுக்கு பொறுப்பாக் கப்பட்டுள்ளபோதிலும் கிளிநொச்சி இரணைமடு நீர்ப்பாசனத் திட்டத்திற்கு வடக்குக்கிழக்கு மாகாண நீர்ப்பாசனத்திணைக்களம் பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

**– வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் –**

# மதுபோதையில் உடைமைகளை சேதமாக்கிய மூன்று ஆசிரிய பயிலுநர்கள் இடைநிறுத்தம்

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா தேசிய கல்வியியற் கல் லூரியின் ஆசிரியப் பயிலுநர்களின் விடுதியில் மதுபோதையில் உடை மைகளை சேதமாக்கிய மூன்று ஆசி ரியப் பயிலுநர்கள் இடைநிறுத்தப்பட் டுள்ளனர்.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் இரண்டாம் வருட ஆசி ரிய பயிலுநர் ஒருவரும், முதலாம் வருட ஆசிரியர் பயிலுநர்கள் இரு வருமாக சேர்ந்து கல்லூரி விடுதியில் மது அருந்திவிட்டு மதுபோதையில் விடுதி உடைமைகளை சேதமாக் கியுள்ளனர். இது தொடர்பாக ஆரம்ப விசாரணைகளை மேற்கொண்ட கல் லூரி ஒழுக்காற்றுசபை இம்மூவரை யும் கல்லூரியில் இருந்து இடை நிறுத்தியுள்ளது. (10)

# உளவள சேவையினை வழங்க 42 ஆலோசனை வளவாளர்கள்

(திருமலை)

உளவள சேவையினை வழங்கவென 42 ஆலோசனை வளவாளர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர். ஜி.ரி.இசட் நிறுவன உளவளப் பயிற்சி நெறியை நான்கு மாதம் பூர்த்தி செய்தவர்கள், ஆலோசனை நிறுவனத்தின் ஒருவருட டிப்ளோமாப் பயிற்சியை பூர்த்தி செய்தவர்கள், பட்டப்படிப்பில் உளவியலை ஒரு பாடமாக எடுத்து பூர்த்தி செய்தவர்கள் வளவாளர்களாகத் தேர்ந்தெடுக்கப் படுவர். இவர்கள் திருமலையில் அமையவுள்ள ஆலோசனை வளநிலையத் தில் இணைக்கப்பட்டிருந்தாலும் வலய ரீதியாக சென்று ஆசிரிய ஆலோசகர்க ளுக்கு ஆலோசனை வழிகாட்டியாகச் செயற்படுவார்கள்.

மாதமொருமுறை சகலரும் திருமலை வள நிலையத்தில் கூடி நவீன முறைகளை அறிந்து கொள்வார்கள் எனப் பணிப்பாளர் முருகுப்பிள்ளை மேலும் தெரிவித்தார்.

# வவு.வில் சிறுமி மீது வல்லுறவு புரிந்த சந்தேக நபர் வன்னியில் கைது

(புதுக்குடியிருப்பு)

வவுனியா சிதம்பரபுரம் முகாமில் 14 வயது சிறுமி மீது பாலியல் வல்லுறவில் ஈடுபட்ட வவுனியாவைச் சேர்ந்த இளைஞன் தமிழீழ காவல்துறையின் புதுக்குடி யிருப்பு பணிமனையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, கடந்த 24-07-2005 அன்று இரவு 7.40 மணிக்கு யாரும் இல்லாத படிப்பகக் கட்டடத்தில் சம்மளங்குளம் வவுனியாவைச் சேர்ந்த 17 வயதான தம்பிராசா ரமேஸ் என்பவர் 14 வயது சிறுமி மீது பாலியல் வல்லுறவில் ஈடுபட்டுள்ளார்.

இச்சம்பவத்தை அடுத்து சிறுமியின் பெற்றோர் வவு னியா பொலிசாரிடம் கொடுத்த முறைப்பாட்டை அடுத்து 25ஆம் திகதி அன்று பொலிசார் தேடுதலை நடாத்தியுள்ளனர். இதனையடுத்து சந்தேக நபரான இளைஞன் 26ஆம் திகதி வன்னி வந்து உடையார்கட்டுப் பகுதியில் தங்கியிருந்துள்ளார். இதன் பின்னர் புதுக்குடியிருப்பு காவல் பணிமனையினருக்குக் கிடைத்த தகவலை அடுத்து புதுக்குடியிருப்பு காவல்பணி மனையினர் சந்தேக நபரை கடந்த இரண்டாம் திகதி கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியுள்ளனர். (08)

## ரணில்-விதார் ஹெல்கேசன் சந்தித்துப் பேச்சு

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசனுக்கும் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் பேச்சு வார்த்தை ஒன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்தப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இலங் கைக்கு விஜயம் செய்துள்ள நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் எதிர்க்கட்சித் தலைவரைச் சந்தித்து வடக்கு-கிழக்கு நிலைமைகள் குறித்து பேசியதாக நோர்வேத் தூதரகம் தெரிவிக்கின்றது.

## மரண தண்டனை நிறைவேற்றாமை குறித்து சிறிலங்கா உயர்நீதிமன்ற நீதிபதிகள் கவலை

மரணதண்டனை நிறைவேற்றப் படாமை குறித்து சிறிலங்கா மேல் நீதிமன்ற நீதிபதிகள் சிலர் விசனம் தெரிவித்துள்ளனர்.

மரணதண்டனை நிறைவேற்றப் படாமையினால் நீதிமன்ற பிரிவில் ஏற்படும் நிலைமை என்னவென்பது பற்றி சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு விடயங்களைத் தெளிவுபடுத்த அந்தமேல் நீதிமன்ற நீதிபதிகள் தீர்மானித்துள்ளனர்.

முழுச் சமுதாயத்திலும் பரபரப்பை ஏற்படுத்தும் கொடிய படுகொலைகள் நிகழ்கையில், மரண தண்டனைகள் நிறைவேற்றப்படுமெனக் கூறப்பட்ட போதிலும் சிலகாலம் சென்ற பின் னர் அந்த நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படுத்துவது பிரச்சினைக்குரியது என கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி ரோகிணி பெரேரா தெரிவித்துள்ளார்.


## பணிநிலை வேண்டுகை

கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் தங்களது தன்வரலாறடங்கிய (சுயவிபரம்) வேண்டுகைகளை 2005.08.13 ஆம் நாளுக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும்.

**பணிநிலை:**

01.ஆய அலுவலர் (ஆண்கள்)
02.ஆய உதவியாளர் (ஆண்கள்)

**கல்வித்தகைமை:**

பணிநிலை 01.க.பொ.த (உ/த) பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
பணிநிலை 02.க.பொ.த (சா/த) பரீட்சையில் குறைந்தது 04 பாடங்களில் தேர்ச்சி அடைந்திருத்தல் வேணடும்.

**வேண்டுகை அனுப்ப வேண்டிய முகவரி:**

மேலாளர்,
ஆளணிப்பிரிவு,
நடுவப்பணியகம்,
ஆயம்.

**நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள்:**

2005.08.16
காலை 10.00 மணிக்கு

**நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம்:**

நடுவப்பணியகம்,
ஆயம்,
கிளிநொச்சி.

குறிப்பு:-நேர்முகத்தேர்வுக்குக் கடிதம் அனுப்பப்படமாட்டாது. நேர்முகத்தேர்வுக்குச் சமுகமளிப்பவர்கள் தகைமைச் சான்றிதழ்களுடன் வரவும்.

(சி.12491)

மேலாளர், ஆளணிப்பிரிவு, ஆயம்.


## மகிந்த, அநுராவின் வற்புறுத்தலுக்காகவே தேர்தல் திகதி குறித்து உயர்நீதிமன்றம் கோரல்

### சனாதிபதி செயலகம் அறிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சனாதிபதி வேட்பாளர் மற்றும் பிரதமர் வேட்பாளரின் வற்புறுத்தலுக்கு அமையவே அடுத்த சனாதிபதித்தேர் தல் நடத்தப்படும் திகதி குறித்து உயர் நீதிமன்றத்தின் கருத்தை அறிய சனாதிபதி நடவடிக்கை எடுத் தாரென சனாதிபதி செயலகம் வெளி யிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவின் சிபாரிசிற்கு அமை யவும் பொதுசன ஐக்கிய முன்னணி யின் அதியுயர் பீடத்துடன் நடை பெற்ற பேச்சுவார்த்தைகளை அடுத் துமே அடுத்த சனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள காலம் தொடர்பாக சனாதிபதி உயர் நீதிமன்றத்தின் கருத்தைக் கேட்டிருந்தார் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரச வங்கிகளின் கட்டமைப்பை சீர்குலைக்க அரசு முயற்சி

### - ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரச வங்கிகளின் கட்டமைப்பை சீர் குலைக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாக ஐக்கிய தேசிய கட்சி குற்றம் சாட்டியுள்ளது.இந்த விடயம் குறித்து வங்கிகளின் தொழிற்சங்கங்கள் கூட புரிந்து கொள்ளவில்லை என்பது துரதிர்ஷ்டவசமானது என ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்

சம்பந்தப்பட்ட துறையில் இரண்டு வருடங்கள் பயிற்சிபெற்ற இளைஞர்களை சேவையில் இருந்து நீக்கி, அரசியல் சார்புள்ள நபர்களை வங்கிக்குள் உள்வாங்க நிதியமைச்சு நடவடிக்கைகள் எடுத்திருப்பதாக அவர் குற் றஞ்சாட்டியுள்ளார். இது உத்தேசத் தேர்தலில் மக்களை ஏமாற்றும் உபா யமாகக் கணிக்கப்பட வேண்டும் என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.(32)

## ஊடகவியலாளருக்கு ஓய்வூதியத்திட்டம்

### -பிரதி ஊடகத்துறை அமைச்சர் தகவல்

(கொழும்பு)

ஊடகவியலாளர்களுக்கு ஓய்வூதியத்தை பெற்றுக்கொடுக்கும் திட்டம் ஒன்று குறித்து ஆராயப்படுவதாக பிரதி ஊடகத்துறை அமைச்சர் திலான் பெரேரா தெரிவித்துள்ளார். இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்துடன் நடைபெற்ற பேச்சுவாத்தையை அடுத்து இந்தக் கருத்தை அவர் வெளியிட்டுள்ளார். இதன்படி தனியார் ஊடக நிறுவனங்களில் பணிபுரியும் சுமார் இரண்டாயிரம் நிரந்தர பத்திரிகையாளர்கள் நன்மைபெறுவர் என பிரதி அமைசசர் தெரிவித்துள்ளார். விரைவில் இது தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ள அவர், ஓய்வூதிய திட்டத் திற்குள் கொண்டு வரப்படும் பத்திரிகையாளர்களுக்கு இலவசக் காப்புறுதியும் உரித்தாகும் எனத் தெரிவித்துள்ளார். (32)


## தமிழீழவைப்பகம்

## பணிநிலை வேண்டுகை

*தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியானவர்களி டமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.*

**பணிநிலை** :- அலுவலர் (பயிலுநர்)

**தகைமைகள்** :- ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் தொழில்நிர் வாகமாணி (BBA)/ வணிகமாணி (B.Com)/ விஞ்ஞானமாணி (B.Sc) பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

அல்லது

ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமா சான்றிதழைப் (HNDA) பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றின் வங்கியியல் பட்டப் படிப்பை (Diploma in Banking) நிறைவு செய்தவராக இருத்தல் வேண்டும்.

**மாதாந்த ஊதிய அளவுத்திட்டம்:- 4,500+6,000**

**அகவை எல்லை** :- 32 வருடங்களுக்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்.

மேற்காட்டப்பட்ட பணிநிலைக்குத்தகுதியானவர்கள் தம்மால் தயாரிக்கப்பட்ட சுயவிளக்கங்களுடனும், கீழ்க்காட்டப்படும் ஆவணங்களுடனும் இரத்தினம் மேல்மாடி, யாழ். சாலை, கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழவைப்பக, நடுவப்பணியக, மனிதவளப்பகுதிக்கு, 11.08.2005 ஆம் நாள் வியாழக்கிழமை காலை 10.00மணிக்கு நேரில் வருகை தருமாறு வேண்டப்படுகின்றனர்.

01) கல்வித்தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
02) ஏனைய தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
03) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்
04) நற்சாட்சிப் பத்திரங்கள்

மனிதவள மேலாளர்,
மனிதவளப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(சி.12475)


## பெரும் வாகன மோசடியில் ஈடுபட்ட பெண் பொலிசாரால் கைது!

(கொழும்பு)

பத்திரிகையில் விளம்பரம் செய்து வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி பெருமளவு வாகனங்களை விற்பனை செய்தும், அடகு வைத்தும் பாரிய வாகன மோசடி செய்த வாடகைக்கார் நிறுவனமொன்றின் உரிமையாளரான பெண் ஒருவரை கொழும்பு கோட்டைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

வாகன மோசடி தொடர்பாக கோட்டைப் பொலிஸ் நிலையத்திற்கு சில தினங்களுக்கு முன்னர் கிடைத்த முறைப்பாடொன்றையடுத்து விசாரணை களை முடுக்கி விட்டபோதே இந்த வாகன மோசடி அம்பலத்திற்கு வந்த துடன் மோசடியில் ஈடுபட்ட பெண்ணும்கைது செய்யப்பட்டார்.

இதேவேளை இப் பெண்ணின் மோசடிகளுக்கு ஒத்துழைத்த தரகர்கள் இருவர் தலைமறைவாகியுள்ளனர்.

சந்தேக நபரான பெண்ணிடமிருந்து பொலிசார் பெற்ற வாக்கு மூலங்கள் மற்றும் தமது வாகனங்களைப் பறிகொடுத்த வாகன உரிமையாளர் களிடமிருந்து பெற்ற தகவல்களின் அடிப்படையில் கடந்த ஒரு வாரகாலத்திற் குள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து பத்து கோடி ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியான 60 இற்கும் அதிகமான வாகனங்கள் கைப்பற்றப்பட்டதுடன் மேலும் பல கோடி ரூபா பெறுமதியான வாகனங்கள் தேடப்பட்டு வருவதாக வாகன மோசடியை வெளிச்சத்திற்கு கொண்டு வந்த பொலிஸ் அத்தியட்சகர் லகஷ்மன் சில்வா தெரிவித்தார்.

தற்போது மீட்கப்பட்டுள்ள வாகனங்களின் பெறுமதி 40 கோடி ரூபாவாகும்.


பத்திரிகையில் "புளூடயமண்ட் ரூர்ஸ் அண்ட்டிரவல்ஸ்" என்ற பெயரில் விளம்பரம் செய்து வாடகைக் கார் சேவையை நடத்திவந்துள்ள இந்தப் பெண் இதுவரை 171 வாகனங்களை மோசடி செய்துள்ளார்.

ரமணி பிரதீப்பிக்கா நாணயக்கார (வயது- 39 ) என்ற இவர் கடந்த பத்து வருட காலமாக வாடகை வாகன சேவைகளில் ஈடுபட்டு வந்துள்ளார்.

இவருக்கு எதிராக மீரிஹான, வெலிக்கடை, கொஹுவல உட்பட பல பொலிஸ் நிலையங்களில் வாகன மோசடி தொடர்பாக நூற்றுக்கு மேற்பட்ட புகார்கள் செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பெண்ணிடம் தமது வாகனங்களைப் பறிகொடுத்த வாகன உரிமையாளர்கள் பலர் கோட்டைப் பொலிஸ் நிலையத்திற்கு வந்து தமது வாகனங்கள் குறித்த அடையாளங்களைக் காட்டியதுடன் வாடகை ஒப்பந்தத் தின்படி தங்களுக்கு வாடகைப்பணம் தரவில்லை என்றும் மாதா மாதம் வாகனங்களைக் காண்பிக்க முன்வரவில்லையெனவும் தெரிவித்தனர்.

# பெண்களிற்கு சொத்தில் சம உரிமை
# மத்திய அரசு சட்டம் இயற்றுகிறது



ப.சிதம்பரம்

### மத்திய அமைச்சர் ப. சிதம்பரம்

**பெண்களுக்கு சொத்தில் சமஉரிமை வழங்க வழி செய்யும் சட்டத்தை மத்திய அரசு இயற்றி வருவதாக மத்திய நிதி அமைச்சர் ப. சிதம்பரம் தெரிவித்துள்ளார்.**

பெண்தொழில் முனைவோர்களுக்கான ஒருநாள் கருத்தரங்கு பெங்களூரில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு மத்திய நிதி அமைச்சர் ப. சிதம்பரம் பேசியபோதே அவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்;

குடும்பச்சொத்தில் பெண்களுக்கு சம உரிமை அளிக்கும் வகையில் மத்திய அரசு சட்டத்திருத்தம் செய்து வருகின்றது. குடும்பத்தில் வன்முறையில் ஈடுபடுகின்றவர்களை தண்டிக்க வகைசெய்யும் சட்டம் ஒன்றுக்கும் மத்திய அரசு அங்கீகாரம் அளித்திருக்கின்றது.

பாராளுமன்றம் மற்றும் மாநில சட்டசபைகளில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு அளிக்க மத்தியரசு எல்லாவிதமான வழிகளையும் ஆராய்ந்து வருகின்றது. பெண்களை பிரதமராகவோ முதல்வராகவோ ஏற்பவர்கள் அவர்களை எம்.பிக்களாக ஏற்க மறுப்பது ஏன் என்பது ஆச்சரியம் அளிக்கிறது.

பெண்கள் இரவில் வெளியே செல்ல முடியாது என்பதால் பெண்களுக்கு பாதுகாப்பு அளிப்பது மிக மிக முக்கியமானது என்று இங்கே பேசிய உறுப்பினர் ஒருவர் கூறினார்.

பெண்கள் தற்காப்பு கலைகளை கற்றுக்கொள்ள வேண்டும். தங்களை தாக்க வருகிறவர்களை கொன்று விடாமல் விரட்டி அடிக்க பெண்களுக்கு தேவையான எத்தனையோ சாதனங்கள் தற்போது தாராளமாக கிடைக்கின்றன. கடன் கொடுப்பதில் வங்கிகளும் பெண்களிடம் பாரபட்சமாக நடந்து கொள்கின்றன. வங்கிகள் தங்கள் அணுகுமுறையை மாற்றிக்கொள்ள வேண்டும். பெண்கள் சுயஉதவி குழுக்கள் கடன்களை திருப்பி கொடுப்பதில் 95 சதவீதம் சாதனை புரிந்து இருக்கின்றன என்பதை வங்கிகள் எண்ணிப் பார்க்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.



மத்திய அமைச்சர் தயாநிதி மாறனுக்கு கோயம்புத்தூர் காருண்யா பல்கலைக்கழகம் சார்பில் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. இதை பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் பால் தினகரன் விருது வழங்கியபோது எடுத்த படம்.

# அணுசக்தி துறையில் நாம் அதிக முதலீடு செய்ய வேண்டும்

### - இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் -

அணுசக்தி துறையில் நாம் அதிக முதலீடு செய்ய வேண்டும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் கூறினார்.

பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் எரிசக்தி ஒருங்கிணைப்பு சபைக் கூட்டம் டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் அதிகரித்துவரும் பெற்றோல், நிலக்கரி தட்டுப்பாடு குறித்து விவாதிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தின்போது பிரதமர் மன்மோகன் சிங் கூறியதாவது;

சர்வதேச எண்ணெய் விலை உயர்ந்து வருவதால் இந்தியா தனது எரிசக்தி தேவைகளை பல இடங்களில் பெற நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. நியாயமான விலைக் கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும்.

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய கச்சா எண்ணெய் விலை உயர்வால் இந்திய பொருளாதாரம் பாதிக்காமல் இருக்கப் போதுமான எரிசக்தி பாதுகாப்பு ஏற்படுத்த வேண்டும்.

பெற்றோல், இயற்கை எரிவாயு, நிலக்கரி, சூரியசக்தி, நீரமின் மற்றும் அணு மின்சாரம் உள்ளிட்ட அனைத்து எரிசக்தி ஆதாரங்களையும் பயன்படுத்த வேண்டும். இவற்றில் போதுமான முதலீடு செய்யப்படுவதை மத்திய அமைச்சகங்கள் உறுதி செய்ய வேண்டும். அணுசக்தி துறையில் இந்தியா அதிக முதலீடு செய்ய வேண்டும் எனத் தெரிவித்தார்.

அணுசக்தித் துறையில் அமெரிக்காவுடன் வெற்றிகரமாக பேச்சுவார்த்தை முடித்த பிரதமர் மன்மோகன் சிங்கைக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் பாராட்டினர். அணுமின் திட்டங்களுக்கு தேவைப்படும் யுரேனியத்தை அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்துகொள்ள இது பெரிதும் உதவும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

# தேவகௌடாவை சாடுகிறார் பதவி நீக்கப்பட்ட சித்தராமையா

"முன்பு ,தேவகௌடா என்னை முதலமைச்சராக விடாது தடுத்தார். அதுபோல் ராமகிருஸ்ண ஹெக்டே உட்படப் பல தலைவர்களை ஒழித்துக்கட்டினார்'' என்றார்.. கர்நாடகத்துணை முதலமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட சித்தராமையா. கர்நாடக மதச்சார்பற்ற ஜனதா தளத்தை விட்டு நீக்கப்பட்ட சித்தராமையா துணை முதலமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.அவர் நேற்று முன்தினம் பெங்களூரில் நிருபர்களிடத்தில் பேட்டி அளித்தார். அப்போது அவர் கோபமாகக் கூறியதாவது:

மதச்சார்பற்ற ஜனதாத் தளத் தலைவர் தேவகௌடா என்னை துணை முதலமைச்சர்பதவியைவிட்டு நீக்கியதன் மூலம் பழிவாங்கிவிட்டார். அவர் நடவடிக்கை சனநாயக விரோதமானது. அவர் ஹிட்லர் போன்ற சர்வாதிகாரி. என்னோடு இரு மந்திரிகைகளையும் தேவகௌடா நீக்கியது அநியாயம். நான் மதச்சார்பற்ற ஜனதாத்தளத்தில் இருக்கிறேன் காங்கிரஸ் உட்பட எந்தக்கட்சியிலும் சேரமாட்டேன்.

முன்பு தேவகௌடா அரசியல் தலைவர்கள் ராமகிருஸ்ண ஹெக்டே, எஸ் .ஆர் பொம்மை, ஜே.எச் பட்டீல் ஆகியோரை ஒழித்துக் கட்டினார். அந்தப்பட்டியலில் நானும் நீக்கப்பட்ட இருமந்திரிகளும் சேர்க்கப்பட்டோம் முன்பு நான் முதலமைச்சராவதை தடுக்கவே தேவகௌடா முதலமைச்சர் பதவியை காங்கிரசுக்கு விட்டுக்கொடுத்தார்.

தேசிய சனநாயகக் கூட்டணி அமைப்பாளர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் எனது 25 ஆண்டுகால நண்பர். அவர் என்னை சந்தித்துப்பேசியதில் முக்கியத்துவம் எதுவும் இல்லை எனவும் தெரிவித்தார்.

# மராட்டியத்தில் பெய்த கடும் மழையால் பலியானோர் 1050ஐத் தாண்டியது

மராட்டியத்தில் பெய்த கடும் மழைக்கு பலியானவர்களின் எண்ணிக்கை 1050ஐத் தாண்டியது. மழையால் 33 ஆயிரம் கிலோ மீற்றர் வீதிகள் அழிந்தன ஒன்பது ஆயிரம் கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

மராட்டிய மாநிலத்தில் கடந்த மாதம் 26 ஆம் திகதி முதல் ஐந்து நாட்கள் வரலாறு காணாத மழை பெய்தது. இதனால் போக்குவரத்து தடைப்பட்டது மழை ஓய்ந்து தற்போது இயல்பு வாழ்க்கை திரும்பியிருக்கிறது.

ஆனாலும் மழை வெள்ளம் ஏற்படுத்திய பாதிப்புகள் இன்னும் மறையவில்லை. மழை வெள்ளத்துக்கு பலியானவர்களின் எண்ணிக்கை 1056 ஆக உயர்ந்துள்ளது மும்பையில் மட்டும் 452 பேர் பலியானார்கள். அதற்கு அடுத்ததாக தேனே மாவட்டத்தில் 175 பேர் மடிந்தார்கள்.

மழைநீர் சூழ்ந்ததால் இரண்டு இலடசம் மக்கள் வீடுகளைவிட்டு அப்புறப்படுத்தப்பட்டனர், 50 பேரை காணவில்லை. அவர்கள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

மாநிலம் முழுவதும் 33 ஆயிரத்து 417 கிலோ மீற்றர் தூரமுள்ள வீதிகள் முற்றிலுமாக அழிந்து விட்டன. அவற்றை மீண்டும் சீரமைக்க ரூ.1000 கோடி வேண்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது.


இவை தவிர 353 கிலோ மீற்றர் நீளமுள்ள வீதிகளில் பெரிய வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன. இந்த மழை வெள்ளத்தால் மாநிலம் முழுவதும் ஏற்பட்ட சேத மதிப்பு ஒன்பது ஆயிரம் கோடிரூபாவாகும்.

மொத்தமுள்ள 35 மாவட்டங்களில் 33 மாவட்டங்கள் மழையால் பாதிக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில் மும்பையிலும், அதன் புறநகர் பகுதியிலும் மிதமான மழையும் தேனே ராஜ்காட் மாவட்டங்களில் ஆங்காங்கே கனமழையும் ,பெய்யும் என்று வானிலை ஆராய்ச்சி நிலையம் எச்சரித்துள்ளது.

# காலையில் கைதாகி பின்னர் மாலையில் விடுதலையாகும் போராட்டம் நடத்தமாட்டேன்

### - நடிகர் விஜயகாந்த்



நடிகர் விஜயகாந்த் நேற்று முன்தினம் ஏழை மாணவ, மாணவிகளுக்கு 25 இலட்சம் ரூபா மதிப்பிலான உதவிகளை வழங்கினார்.

காலையில் கைதாகி மாலையில் விடுதலையாகும் போராட்டம் நடத்தமாட்டேன் என்று நடிகர் விஜயகாந் கூறியுள்ளார்.

நடிகர் விஜயகாந்த் தனது அறக்கட்டளை சார்பாக ஏழை மாணவ, மாணவிகளுக்கு வழங்கவென 25 இலட்சம் ரூபாய்க்கான உதவிகளை அந்தந்த மாவட்ட தலைவர்களிடம் நேற்று முன்தினம் சென்னை நூறு அடி சாலையிலுள்ள ஆண்டாள் அழகர் கல்யாண மண்டபத்தில் வைத்து வழங்கினார். அங்கு அவர் நிருபர்களிடம் பேசுகையில்; நான் தொண்டர்படை உருவாக்குவது உண்மைதான். அவர்கள் மாநாட்டு பணிகளில் ஈடுபட்டு கூட்டத்தினரை கண்காணித்து கட்டுப்படுத்துவார்கள். எல்லா மாவட்டத்திலிருந்தும் அதற்காக இளைஞர்கள் தேர்வு செய்யப்படுகின்றார்கள். அவர்களுக்கு முன்னாள் இராணுவ வீரர் ஒருவர் பயிற்சி அளிப்பார் எனத்தெரிவித்தார்.

நீங்கள் மக்களுக்காக போராட்டங்களில் ஈடுபடுவீர்களா? என ஒருவர் கேட்டபோது காலையில் சாலை மறியல் செய்துவிட்டு பொலிஸ் வானில் ஏறி மாலையில் விடுதலையாகும் போராட்டத்தை நான் செய்யமாட்டேன். தேவைப்பட்டால் நான் போராடுவேன். அது மக்களுக்கு இடையூறு இல்லாத போராட்டமாக இருக்கும். அது என்ன போராட்டம் என்பதை செய்யும் போது பார்த்துக் கொள்ளுங்கள் எனத்தெரிவித்தார் விஜயகாந்த்.

# வெடி குண்டுகள் கண்டெடுப்பு



செயல் இழக்கச் செய்த வெடி குண்டைப் பொலிசார் செய்தியாளர்களிடம் காண்பித்தனர்.

தமிழகம் தர்மபுரி அருகே ஒரு முட்புதர் ஒன்றில் தீவிரவாதிகள் பதுக்கி வைத்ததாக நம்பப்படும் 11 வெடிகுண்டுகளை தாம் கண்டெடுத்திருப்பதாக தமிழகப் பொலிசார் அறிவித்துள்ளனர்.

தாமபுரி அருகே உள்ள சிறுகிராமமொன்றின் கைவிடப்பட்ட வீட்டின் அருகே உள்ள முட்புதருக்குள் சந்தேகத்திற்கிடமான பொருட்கள் ஏதோ இருப்பதாக பொலிசாருக்குக் கிடைத்த தகவலைபடுத்து மோப்ப நாய்கள் சகிதம் அவ்விடத்திற்கு விரைந்த பொலிசார் அங்கு பொதி ஒன்றினுள் வெடிகுண்டுகள் இருப்பதைக்கண்டு பிடித்துள்ளனர். இவ் வெடிகுண்டு களைத் தீவிரவாதிகள் மறைத்து வைத்திருக்கலாம் எனப் பொலிசார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

# இந்தியாவிற்குள் 11 பாகிஸ்தானியர்கள் மறைந்துள்ளதாக அறிவிப்பு

இந்தியாவில் மறைந்துள்ள 11 பாகிஸ்தானியரை இந்திய பொலிசார் தேடி வருகின்றனர்.

கடந்த மார்ச் மாதம் இந்திய - பாகிஸ்தான் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மொகாலியில் நடைபெற்றது. இந்தப் போட்டியை காண 2754 பாகிஸ்தானியர்கள் வாகா எல்லை வழியாக இந்தியா வந்தனர். இவர்களில் 11 பேர் விசாக் காலம் முடிந்தும் பாகிஸ்தான் திரும்பாமலுள்ளனர். இவர்கள் மீது பஞ்சாப் பொலிசார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

இந்நிலையில் வருகிற 15 ஆம் திகதி சுதந்திர தினம் கொண்டாடப்படுகிறது. அன்றைய தினம் பாகிஸ்தான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என்று ரகசிய தகவல் வெளியாகியுள்ளது. இந்தியாவுக்குள் மறைந்திருக்கும் 11 பாகிஸ்தானியரும் அசம்பாவித செயல்களில் ஈடுபடக்கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது. எனவே அவர்களைப் பிடிக்க பொலிசார் வலைவீசி தேடி வருகின்றனர்.

மேலும் காணாமல்போன 11 பாகிஸ்தானியர் புகைப் படங்களையும் பஞ்சாப் பொலிசார் வெளியிட்டுள்ளனர். அவர்களைப் பற்றி தகவல் தெரிந்தவர்கள் உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு தொடர்பு கொள்ளும்படி பஞ்சாப் பொலிசார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# அவுஸ். பந்து வீச்சாளர் துடுப்பாட்டத்தில் அசத்தல்
# இங்கிலாந்து மயிரிழையில் பெற்ற வெற்றி






வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆஷஸ் டெஸ்ட் தொடரின் பரபரப்பான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி இரண்டு ஓட்டங்களால் அவுஸ்திரேலியாவை தோற்கடித்தது.

இங்கிலாந்தின் எட்பாஸ்ரன் மைதானத்தில் நடைபெற்ற மேற்படி போட்டியில் மூன்றாம் நாளான நேற்று முன்தினம் 282 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா ஆட்டநேர முடிவில் 175 ஓட்டங்களுக்கு எட்டு விக்கெட்டுக்களை இழந்து தோல்வியின் விளிம்புக்குச் சென்றது.

இந்த நிலையில் நான்காம் நாள் இங்கிலாந்து அணிக்கு வெற்றி உறுதி என்ற நிலையில் எஞ்சிய இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தி வெற்றியைச் சுவைக்க இருந்த இங்கிலாந்து அணிக்கு நெருக்கடியை கொடுத்தனர் அவுஸ்திரேலிய அணியினர்.

எட்டாவது விக்கெட் இணையான ஷேன் வோர்ன், பிரெட்லீ இணை "நாம் பந்து வீச்சில் மட்டுமல்ல, துடுப்பாட்டத்திலும் வல்லவர்கள்" என்பதை நிரூபித்தனர்.

இவர்களின் துடுப்பாட்டம் இங்கிலாந்து அணியின் வெற்றி நம்பிக்கையை நிச்சயம் சிதைத்திருக்கும் என்று துணிந்து கூறலாம். இவர்கள் வீழ்த்த முடியாத வீரர்களாக களத்தில் அதிரடியாக ஓட்டங்களைக் குவித்துக் கொண்டிருந்தனர். இதில் பிரெட்லீ ஆட்டமிழக்காது 43 ஓட்டங்களைக் குவித்ததும் சிறப்பம்சம். இறுதியில் வெற்றிபெற மூன்று ஓட்டங்களே இருந்த நிலையில் கஸ்பரோவிச் 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஷேன் வோர்ன் 43 ஓட்டங்களைப் பெற்று தானே விக்கெட்டை தாக்கி (Hit Wicket) ஆட்டமிழந்தார்.



இதில் ஷேன் வோர்ன், பிரெட்லீ இணை 45 ஓட்டங்களையும், பிரெட்லீ, கஸ்பரோவிச் இணை 59 ஓட்டங்களைப் பெற்று இங்கிலாந்து அணிக்கு திகிலூட்டியது.

பந்து வீச்சில் பிளிண்டொப் நான்கு விக்கெட்டுக்களையும், ஹார்மிசன், கைல்ஸ் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக சலகதுறை வீரர் பிளிண்டொப் தெரிவானார்.

இங்கிலாந்து முதல் இனிங்ஸ் - 407, அவுஸ்திரேலியா முதல் இனிங்ஸ் - 308, இங்கிலாந்து இரண்டாவது இனிங்ஸ் - 182, அவுஸ்திரேலியா இரண்டாவது இனிங்ஸ் - 279.

மேற்படி வெற்றி மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு போட்டியில் வெற்றி பெற்றுள்ளன.

## 600ஐ நெருங்குகிறார் வோர்ன்



டெஸ்ட் கிரிக்கெட்டில் மற்றுமொரு புதிய சாதனையை நெருங்குகிறார் அவுஸ்திரேலிய சுழல்பந்து ஜாம்பவான் ஷேன் வோர்ன். நேற்று முன்தினம் ஆறு விக்கெட் எடுத்ததன் மூலம் 599 விக்கெட்டுக்களை அவர் வீழ்த்தியிருக்கிறார். இன்னும் ஒரு விக்கெட்டை அடுத்த டெஸ்ட் போட்டியில் அவர் வீழ்த்தினால்.. டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் முதல் முறையாக... 600 விக்கெட்டை வீழ்த்திய முதல் பந்து வீச்சாளர் என்ற பிரமாண்ட சாதனை படைப்பார்.

## தனது கிரிக்கெட் வாழ்வு முடிந்துவிடவில்லை




இங்கிலாந்தின் எட்ஜபஸ்டனில் நடைபெறும் இங்கிலாந்து அணியுடனான ஆஷஸ் தொடரின் இரண்டாவது டெஸ்ட் போட்டி முடிவுற்றபோதும் அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளரான கிளென் மெக்ராத் தனது கிரிக்கெட் வாழ்வு முடிந்துவிடவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

35 வயதான மெக்ராத் இரண்டாவது போட்டிக்கு முன்னர் நடைபெற்ற பயிற்சியின்போது காலில் காயமடைந்தார். ஊன்று கோல் உதவியுடன் நடந்த மெக்ராத் தற்போது ஊன்று கோலின் உதவியின்றி நடந்தும் நீந்தியும் பயிற்சி செய்கிறார்.

முதலாவது போட்டியின் வெற்றிக்குக் காரணமாக இருந்த அவர் ட்ரன் பிறிஜில் நடைபெறவிருக்கும் மூன்றாவது டெஸ்டில் வெற்றியைப்பெற்றுத் தரும் நம்பிக்கையில் இருப்பதாகக் கூறியுள்ளார்.

எனினும், வைத்தியர்கள் அவர் ஆறுவார காலம் சிகிச்சைபெற வேண்டியிருப்பதால் இத்தொடரிலிருந்து விலகியிருப்பது நல்லது எனத் தெரிவிக்கின்றனர்.

## மேற்கிந்தியத்தீவை 7 ஓட்டங்களால் தோற்கடித்து
## இறுதிப் போட்டிக்கு முன்னேறியது இந்தியா



சிறிலங்காவில் நடைபெற்றுவரும் முக்கோண ஒரு நாள் போட்டியில் நேற்று நடைபெற்ற பரபரப்பான இறுதி லீக் போட்டியில் மேற்கிந்தியத்தீவு அணியை ஏழு ஓட்டங்களால் தோற்கடித்த இந்திய அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

கொழும்பு பிரேமதாஸ விளையாட்டு மைதானத்தில் இரவு-பகலாக நடைபெற்ற மேற்படி போட்டியில் முதலில் ஆடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 262 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் யுவராஜ்சிங் 110 ஓட்டங்களையும், முகமட் கைய்ப் ஆட்டமிழக்காது 83 ஓட்டங்களையும் பெற்றனர்.


பந்து வீச்சில் பட்லர், பவல், டினோறின், பாங்ஸ் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

வெற்றியிலக்கு நோக்கி ஆடிய மேற்கிந்தியத் தீவு நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 255 ஓட்டங்களைப் பெற்று ஏழு ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் மோட்டன் 84 ஓட்டங்களை யும், ராம்டீன் ஆட்டமிழக்காது 74 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் கும்ளே மூன்று விக்கெட்டுக்களையும், பதான் இரண்டு விக்கெடடுக்களையும் கைப்பற்றினர்.

இறுதிப் போட்டி நாளை சிறிலங்கா அணி, இந்திய அணியை எதிர்த்தாடும்.

## மக்கலம், விக்டோரி சதம்
## வலுவான நிலையில் நியூசிலாந்து



சிம்பாப்வேக்குச் சுற்றுலாவை மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும், சிம்பாப்வே அணிக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்ட நேர முடிவில் நியூசிலாந்து அணி ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 452 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

நேற்று ஹராரே மைதானத்தில் ஆரம்பமான முதலாவது டெஸ்ட் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே நியூசிலாந்தை முதலில் ஆடப் பணித்தது.

முதலில் ஆட்டத்தை ஆரம்பித்த நியூசிலாந்து ஆரம்பத்தில் தடுமாறியபோதும் மக்கலம், விக்டோரி ஆகியோரின் சதத்தின் மூலம் பலமடைந்து வலுவான நிலையைப் பெற்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் மக்கலம் 111, விக்டோரி 127, பிளெமிங் 73 ஓட்டங்களையும், சேன்பொன்ட் ஆட்டமிழக்காது 41 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் மக்வியர் மூன்று விக்கெட்டுக்களையும், ஸ்ரீக்,மெப்பூ தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.




## தலைவர் பதவியில் ராவிட் நீடிப்பாரா?
## 12ஆம் திகதி முடிவு தெரியும்




சிம்பாப்வே தொடருக்கான இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் 12ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளார்.

இலங்கை முத்தரப்பு ஒரு நாள் தொடருக்கான இந்திய கிரிக்கெட் அணித் தலைவராக ராகுல் ராவிட் இருக்கிறார். இந்தத் தொடருக்கான தலைவராக மட்டுமே ராகுல் அறிவிக்கப்பட்டுள்ளார். ஐ.சி.சி. தடை முடிந்து சௌரவ் கங்குலி அணிக்குத் திரும்பிவிட்டார். ஆகவே, மீண்டும் அவர் தலைவராகப் பொறுப்பேற்கலாம்.

இலங்கைத் தொடர் முடிந்ததும் இந்திய அணி டெஸ்ட் மற்றும் முத்தரப்பு ஒரு நாள் தொடரில் பங்கேற்க சிம்பாப்வே செல்கிறது. இந்தத் தொடருக்கான இந்திய அணி வரும் 13ஆம் திகதி தேர்வு செய்யப்படுகிறது. அதற்கு ஒரு நாள் முன்னதாக 12ஆம் திகதி இந்தத் தொடருக்கான தலைவர் ராகுலா? அல்லது சௌரவா? என இந்திய கிரிக்கெட் சபை அறிவிக்கும்.

## கால் பந்து வீரருக்கு மரியாதை

ஜேர்மனியைச் சேர்ந்த பிரபல முன்னாள் கால்பந்து வீரர் உவே சீலர். அங்குள்ள ஜேர்மன் ஹம்பர்கர் கழக அணிக்காகவும் விளையாடி இருக்கிறார். இவரது வலது கால் பாதத்தை பிரமாண்ட வெண்கலச்சிலையாக வடிவமைத்து ஹம்பர்க் கால்பந்து மைதானம் முன்பாக வைத்துள்ளனர். இந்த அரிய பெருமை உவே சீலருக்கு கிடைத்துள்ளது.



ஹெல்சின்கி உலக தடகளப் போட்டிகளில் ஆண்களுக்கான 100 மீ. ஓட்டப் பிரிவில் அமெரிக்க வீரர் ஜஸ்டின் காட்லின் (நடுவில்) முதலிடம் பெற்றார். அருகில் பிரிட்டன் வீரர் மார்க் லீவிஸ் (வலது), ஜப்பான் வீரர் அசஹரா.

## வித்தியானந்தாக் கல்லூரி சம்பியன்

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன்விழாவை முன்னிட்டு பாடசாலை அணிகளுக்கிடையில் நடைபெற்ற கால்பந்து போட்டியில் வித்தியானந்தாக் கல்லூரி அணி சம்பியனானது.

இறுதிப் போட்டியில் முல்லைத்தீவு மகாவித்தியாலய அணியை எதிர்த்தாடிய வித்தியானந்தாக் கல்லூரி அணி தண்டஉதை மூலம் சம்பியனானது. (சி)


## 83ஆவது கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு சங்கங்களுக்கிடையில் தாச்சிப் போட்டி

வலிகாமம் பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் 83ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு தனது அங்கத்துவ சங்கங்களுக்கிடையே தாச்சிச் சுற்றுப் போட்டி ஒன்றை நடாத்தத் தீர்மானித்துள்ளது.

இந்தத் தாச்சிப் போட்டி எதிர்வரும் 10, 11ஆம் திகதிகளில் மானிப்பாய் ஆனந்தா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடத்தப்படவுள்ளது.

வலிகாமம் பிரதேசத்தில் அடங்கும் சங்கானை, தெல்லிப்பழை, சுன்னாகம், மானிப்பாய், பண்டத்தரிப்பு, கோண்டாவில், காரைநகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சங்கங்களுக் கிடையிலேயே மேற்படி போட்டிகள் நடைபெறவிருக்கின்றன. (37)

## சிந்தனைக்கு



கல்வியும் மொழியும் பண்பாடும் நிலமும் எமது இனக்கட்டமைப்பைத் தாங்கி நிற்கும் தூண்கள்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 08.08.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## பொருத்தமற்ற கூற்றுக்கள்!

"பிந்தித்திகதியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று அச்சிடுதல் உலகில் எந்தவொரு நாட்டிலும் நடந்திராது. இனிமேலும் நடக்காத ஒரு செயற்பாடு. பிந்திய திகதி இடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை எந்த வகையிலும் அச்சிடப்போவதில்லை" என அரச அச்சகத் தலைவர் லக்ஷ்மன் குணவர்த்தன தெரிவித்திருப்பது சிலவேளைகளில் சரியாகவும் இருக்கலாம்.

அதாவது உலகின் சனநாயக நாடு ஒன்றில் இத்தகைய நடவடிக்கைக்கு வாய்ப்பு இல்லை என்ற குணவர்த்தனவின் கூற்றுக்கள் சனநாயகப் பாரம்பரியத்திற்குப் பொருத்தப்பாடானவையாக இருக்கலாம். அத்தோடு குணவர்த்தன அவர்கள் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை இரகசியமாக அச்சிட முடியாது எனவும் கூறியிருப்பதும் ஊழல் மோசடிகள் அற்ற நாடுகளுக்கு ஏற்புடையதாக இருக்கலாம்.

இதேவேளை குணவர்த்தன கூறியிருப்பது போல், பிந்திய திகதியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் அச்சிடப்படாமல் இருக்கலாம். ஆனால், அவை அச்சிட முடியாது, அச்சிடப்படமாட்டாது என்பதற்கு அவர்கூறிய காரணங்கள் சிறிலங்காவிற்கோ அன்றி சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கோ பொருத்தப்பாடானதாக இல்லை.

ஏனெனில் அவர்கூறிய காரணங்கள் உயரிய சனநாயகப் பண்புகள் நிறைந்த நாடு ஒன்றிற்கே பொருத்தப்பாடானதாகும். ஆனால் சிறிலங்காவில் சனநாயகம் என்பது பேச்சளவிலானது மட்டுமே. அடிக்கடி தேர்தல்கள் நடத்தப்படுகின்றன என்பதனால் சனநாயகம் ஒளிவிடுவதாக அர்த்தம் கொள்ள முடியாது. அதிகாரத்தில் உள்ளவர்கள் தமது தேவைகருதி தேர்தல்களை நடத்துகின்றார்கள் என்பதே யதார்த்த பூர்வமானதாகும்.

சனநாயகப் பாரம்பரியங்களும், மரபுகளும் உண்மையிலேயே கடைப்பிடிக்கப்படுகின்றதெனில், சிறிலங்காவில் பெரும்பான்மை அரசாங்கம் கவிழ்க்கப்படவோ அன்றி அதிகாரத்திலுள்ளவர்களின் விருப்புவெறுப்பிற்கு ஏற்ற விதத்தில் பொதுத்தேர்தல்கள் அடிக்கடி நடைபெறுவதாகவோ இருக்க மாட்டாது.

ஆகையினால், சனநாயக நாட்டில் பிந்திய வர்த்தமானி அறிவித்தல் அச்சிடப்படமாட்டாது, வெளியிடப்படமாட்டாது என்பது சனநாயக நாட்டிற்குப் பொருத்தப்படானதாக இருக்க மாட்டாது என்ற வாதம் சிறிலங்காவிற்கு ஏற்புடையதாகக்கொள்வதற்கு இல்லை.

அடுத்ததாக, பிந்திய வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட வாய்ப்பில்லை என்பதும், ஏற்றுக்கொள்ளத்தக்க வாதமல்ல. ஏனெனில் சனாதிபதி சந்திரிகா இரகசியமானதொரு நிலையில் மூன்றாவது தடவையும் சனாதிபதியாகச் சத்தியப்பிரமாணம் ஒன்றைச்செய்து கொண்டதாகக் கூறுகையில், இரகசியமான முறையில் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிடுவது ஒன்றும் சிரமம்மிக்கதான தொன்றல்ல.

சனாதிபதி ஒருவர் சத்தியப்பிரமாணம் செய்தல் என்பது பல தரப்பினர் முன்னிலையில் மக்களுக்கு அறிவிப்புச் செய்யப்படுதல் என்பதே மரபும், ஒழுங்கும் ஆகும். அதிலும் குறிப்பாக பிரதம நீதியரசர், அமைச்சர்கள் முப்படைகளின் தளபதிகள் மதத் தலைவர்கள் பிரசன்னமாயிருக்க மக்கள் முன்- மக்கள் தொலைக்காட்சியிலோ, வானொலியிலோ இது தொடர்பான நிகழ்வைப் பார்க்கவும் , கேட்கவும் கூடியதான நிலையிலேயே பதவி ஏற்பதும், சத்தியப்பிரமாணம் செய்வதுமுண்டு.

அது மாத்திரமன்றி சத்தியப்பிரமாணம் செய்ததன் பின்னரான உறுதிப்பாட்டிற்கென வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படுவதும், தேர்தல் ஆணையாளருக்கு அறியத்தருவதும் அரசியல் யாப்புச் சார்ந்த வழிமுறையாகும். இத்தகைய நிகழ்வுகளே சனாதிபதியாக பதவி ஏற்றதை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் ஆகும்.

ஆனால், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இத்தனைபேர் மத்தியில் பகிரங்கமாக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கை பதவி ஏற்றதன் பின் மேற்கொள்ளவேண்டிய அரசியல்யாப்பு மற்றும் மரபு சார்ந்த நடவடிக்கைகள் எதையுமே மேற்கொள்ளாது தான் மூன்றாவது முறையாக இரகசியமாகச் சத்தியப்பிரமாணம் செய்ததாகச் சாதிக்கமுனைகின்றார். அதன் அடிப்படையிலேயே அடுத்த சனாதிபதித்தேர்தல் நடத்தப்படவேண்டும் என வாதிடுகின்றார்.

இந்தவகையில் நடந்து கொண்டுள்ள சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது பதவிக்காலத்தை ஓராண்டிற்குப் பிறகு நீடிப்பதற்காக பிந்திய வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிடமாட்டார், அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளமாட்டார் என எவ்வாறு கூறமுடியும்? எதிர்பார்க்க முடியும்? சிலவேளை அரச அச்சகத்தலைவர் குணவர்த்தன நேர்மையானவராக இருக்கலாம். ஆனால், சனாதிபதி சந்திரிகா அவ்வாறானவர் என உறுதிப்படுத்த ஆதாரங்கள் எதுவும் உண்டா?




-பன்னலப் பிரதேசத்தில்-

## ஆறு பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக மாணவன் ஆசிய மனித உரிமைகள் ஆணையத்தில் முறையீடு

பன்னல பொலிசாருக்கு எதிராக பாடசாலை மாணவர் ஒருவர் ஆசிய மனித உரிமைகள் ஆணையத்தில் முறைப்பாடு ஒன்றை செய்துள்ளார். ஆசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தம்புள்ள காரியாலயத்தில் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. தமது வீட்டுக்கு வந்த ஆறு பொலிஸ் அதிகாரிகள் தன்னைத் தாக்கியதாக இந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமது தந்தைக்கு எதிராக நீதிமன்ற பிடிவிறாந்து ஒன்று பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பாக விசாரணை செய்ய வந்த பொலிசார் தன்னைத் தாக்கியதாகவும், குறித்த மாணவர் தெரிவித்துள்ளார். தாக்குதல் தொடர்பாக உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்தால் தம்மை கொலை செய்யப்போவதாக பொலிஸ் அதிகாரிகள் எச்சரித்ததாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

-சிறிலங்கா பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில்

## அரசியல் பழி வாங்கலுக்கு உள்ளானோருக்கு பதவியுயர்வு வழங்க நீதிமன்றம் தடையுத்தரவு

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்பட்டவர்களுக்கு பதவியுயர்வுகள் வழங்கப்படுவதற்கு எதிராக இடைக்கால தடையுத்தரவை மேன்முறையீட்டு நீதிமன்றம் பிறப்பித்துள்ளது. அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்பட்டவர்களுக்கு பதவியுயர்வு வழங்கினால் மேலதிகமான செலவு ஏற்படும். இதன் அடிப்படையில் 4.5மில்லியன் ரூபாவைக் கூட்டுத்தாபனம் மேலதிகமாக செலுத்த வேண்டி ஏற்படுமென தேசிய சேவை சங்கம் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தியுள்ளது

2001 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை 1800 பேர் வரையில் அரசியல் பழிவாங்கல்களுக்கு ஆளாகியுள்ளனர். எனவே அவர்களுக்கு பதவியுயர்வு வழங்கப்பட வேண்டுமென கூட்டுத்தாபனத்தால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

இந்த நிலையில் இந்தப் பதவியுயர்களை வழங்க முற்படும் வழிமுறையானது அனுகூலமற்றது எனத் தேசிய சேவைசங்கம் தாக்கல் செய்துள்ள மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனையடுத்து எதிர்வரும் 17 ஆம் திகதி பதவியுயர்வு வழங்கலை இடைநிறுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளது. அத்துடன் மனு மீதான விசாரணைக்காக கூட்டுத்தாபன பணிப்பாளர் மற்றும் பணிப்பாளர் சபையையும் மன்றில் எதிர்வரும் 14 ஆம் திகதி ஆஜராகுமாறு மேனமுறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (32)

## புகையிரத திணைக்கள ஊழியர்கள் நாளை முதல் பணிப்புறக்கணிப்பு

புகையிர திணைக்கள ஊழியர்கள் நாளை நள்ளிரவு முதல் இரண்டு நாட்களுக்கு அடையாளப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளார்கள். புகையிர சேவை ஊழியர் சங்க கூட்டு முன்னணி, அரசாங்கத்துடன் நடத்தியபேச்சுவார்த்தை தோல்வியடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் 48 மணித்தியாலங்களுக்கு இடம்பெறும் இந்தப் பணிப்புறக்கணிப்பில் தொழில்நுட்பவியலாளர்கள், சைகை வழங்குநர்கள், சாரதிகள் மற்றும் காரியாலய ஊழியர்கள் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

பத்து கோரிக்கைகளை முன்வைத்தே இந்த பணிப்புறக்கணிப்பு போராட்டம் இடம்பெறவுள்ளதாக முன்னணியின் செயலாளர் ராஜித தெரிவித்தார். இது விடயமாக புகையிரத சேவைத்துறை அமைச்சர் பீலிக்ஸ் பெரேராவுடன் தொடர்பு கொண்ட போது இன்று பிற்பகலில் தொடருந்து ஊழியர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக தெரிவித்தார். (32)

## போதைப்பொருளுடன் கைதானவருக்கு மேல் நீதிமன்றம் பிணை மறுப்பு

ஒரு தொகை போதைப் பொருட்களுடன் கைது செய்யப்பட்ட மொகமட் சியாம் என்ற சந்தேகநபரை பிணையில் விடுவிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை கொழும்பு மேல் நீதிமன்றம் நிராகரித்துள்ளது. குறிப்பிட்ட பிணை மனுமீது நடவடிக்கை எடுக்க முடியாது என மேல் நீதிமன்ற நீதிபதி உபாலி அபேரட்ன தெரிவித்தார். இந்த வழக்கு தொடர்பில் சந்தேக நபர் உயர் நீதிமன்றத்திலும் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார். இந்த மனுவை விசாரணை செய்வதற்கு உயர் நீதிமன்றமும் ஒப்புதல் அளித்துள்ளது. எனவே மேல் நீதிமன்றம் இதில் தலையிடுவது ஒவ்வாதது என்ற அடிப்படையில் பிணை மனுவை நிராகரிப்பதாக நீதிபதி தெரிவித்தார். 2003 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகளினால் சந்தேக நபர் 23 கிலோ போதைப்பொருடகளுடன் கொழும்பு வோட்பிளேஸ் வீடு ஒன்றில் வைத்து கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (32)

# வவு.இல் ஆயுத முனையில் குடும்பஸ்தர் கடத்தல்

# தடுக்க முயன்ற மனைவி வெட்டப்பட்டார்

வவுனியா குட்செட் வீதியில் நேற்று இரவு 8.30 மணியளவில் இனம் தெரியாத நபர்களால் ஆயுத முனையில் நபர் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். தடுக்கச் சென்ற அவரின் மனைவி வெட்டப்பட்டு காயங்களுடன் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் கடத்தப்பட்டவர் விஜயன் என்றும் இவர் தனியார்பேருந்துசேவை நடத்திவருபவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. 50 சிறீ 3254 என்ற வாக னத்தில் வந்தவர்களே ஆயுத முனையில் கடத்தி சென்றிருப்பதாக அப்பகுதிக்கு சென்ற வவுனியா மாவட்ட நகர அரசியல் துறைப் பொறுப்பாளர் தர்மேந்திரா தெரிவித்தார் இது தொடர்பாக வவுனியா பொலி சாருக்கு தகவல் கிடைத்த உடன் அவர்கள் சென்று விசாரணைகளினையும் மேற்கொண்டுள்ளார்கள். கடத்தப்பட்டவர் எங்கு கொண்டு செல்லப்பட்டார் என்றோ அல்லது அவ ருக்கு என்ன நடைபெற்றதுஎன்றோ தெரியவில்லை என்று வவுனியா பொலிசார் தெரிவித்தனர். (21)

## இளைஞர் குழுக்களுக்கிடையில் மோதல்

## வவு.இல் இரு இளைஞர்கள் படுகாயம்

வவுனியா பண்டாரிக்குளம் லக்சபான வீதியில் இடம் பெற்ற குழு மோதலில் இரண்டு இளைஞர்கள் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நேற்றிரவு 10.30 மணியளவில் இடம் பெற்ற இந்த மோதலில் 50 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் ஈடுப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. சம்பவத்தினை அறிந்து அப்பகுதிக்கு சென்ற வவுனியா அரசியல் துறையினர் நிலைமையினை கட்டுபாட்டில் கொண்டு வந்ததாக வவுனியா நகர அரசியல்துறை பொறுப்பாளர் தர்மேந்திரா தெரிவித்தார்.

சண்டைக்கு பயன்படுத்தப்பட்ட பத்திற்கும் மேற்பட்ட வாள்கள் மீட்கப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிவித்தார். மோதலில் ஈடுப்பட்டவர்கள் அருகில் இருந்த வீட்டின் மீதும் தாக்குதல்கள் நடத்தியதாகவும், இதன்போது இரண்டு உந்துருளிகளும், இரண்டு துவிச்சக்கர வண்டிகளும், உழவு இயந்திரம் ஒன்றும், வீட்டின் கண்ணாடிகளும் சேதமாக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த மோதலுக்கான காரணம் தெரியாத போதும் இரண்டு விளையாட்டு கழகங்களுக்கு இடையிலான மோதல் இது என்று தெரிவிக்கப்படுகிறது. (21)

**காது,மூக்கு தொண்டை சிகிச்சை**

புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள மருத்துவர் பொன்னம்பலம் நினைவு மருத்துவமனையில் காது,மூக்கு தொண்டை சத்திரசிகிச்சை நிபுணர் றொபேட் பெஞ்சமின் அவர்களால் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிமுதல் பி.ப 2.00 மணிவரை நோயாளர்களைப் பார்வையிட்டு ஆலோசனையும் சிகிச்சையும் வழங்கப்படவுள்ளது. பயன்பெற விரும்புவோர் புதுக்குடியிருப்பு மருத்துவர் பொன்னம்பலம் நினைவு மருத்துவமனையின்வெளிநோயாளர் பகுதியில் தொடர்புகொள்ளவும்.

# இந்த ஆண்டுசனாதிபதித் தேர்தலுக்கு நிதி ஒதுக்கீடு இல்லை

## 100 கோடி ரூபா தேவை என தேர்தல் அதிகாரி கூறுகிறார்

சனாதிபதித்தேர்தல் ஒன்றை நடத்துவதற்குத் தேவையான நிதி கடந்த வரவு-செலவுத்திட்டத்தின் போது ஒதுக்கப்படவில்லை எனத் தேர்தல் திணைக்களத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் திணைக்களத்தின் வழமையான செலவீனங்களுக்குத் தேவையான நிதியே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.இந்நிதியைச் சனாதிபதித் தேர்தல் நடத்துவதற்குப் பயன்படுத்தினால் திறைசேரியிடமே நிதியுதவி கோர வேண்டுமென்றும், இது மிகவும் சிரமமான செயல் என்றும் அவர் தெரிவித்தார்.

1999 ஆம் ஆண்டு நடைபெற்ற சனாதிபதித் தேர்தலுக்கு 72 கோடி ரூபா செலவாகியது என்று கூறிய அவர், எதிர்வரும் சனாதிபதித் தேர்தலுக்கு100 கோடி ரூபா செலவிட வேண்டியநிலை ஏற்படும் என்றும் அவர் கூறினார்.

## மேல் கொத்மலைத் திட்டத்திற்கு எதிராக

## செப்ரெம்பரில் போராட்டங்கள்

மேல்கொத்மலை நீர்த்தேக்க திட்டத்தை எதிர்த்து எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.இதற்கான ஏற்பாடுகளை மேல்கொத்மலை திட்டத்திற்கு எதிரான இயக்கம் மேற்கொண்டு வருவதாக அதன் ஏற்பாட்டாளர் இதம்பையா அறிவித்துள்ளார். இந்தத் திட்டத்தை முன்னெடுக்க இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உடன்பட்டுள்ள நிலையில் அரசாங்கம் ஒப்பந்தம் ஒன்றையும் செய்துக்கொண்டுள்ளது. இந்த நிலையில் குறித்த திட்டத்தை ஒரு போதும் செயற்படுத்த அனுமதிப்பதில்லை என அவர் எச்சரித்துள்ளார். இதேவேளை இந்தத் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படும் என எரிசக்தி எரிபொருள் துறை அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த் தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (32)

## பட்டதாரிகளை நிரந்தரமாக்கக் கோரி

## கொழும்பில் ஆர்ப்பாட்டத்திற்கு ஏற்பாடு

பட்டதாரிகளை நிரந்தரமாக்கக் கோரி கொழும்பில் ஆர்ப்பாட்டமொன்று நடைபெறவுள்ளது.

2004 ஆம் ஆண்டு தொழில் பெற்ற பட்டதாரிகள் ஒன்றியத்தினால் எதிர்வரும் 11 ஆம் திகதி கொழும்பு கோட்டையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.லிப்டன் சுற்று வட்டத்தில் எதிர்ப்பு பேரணி ஆரம்பமாகி கொழும்பு கோட்டை வரை அது முன்னெடுக்கப்படவுள்ளது. பட்டதாரிகளை நிரந்தரமாக்குமாறு கோரியே இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது. (32)

### திருமலை...

காயமடைந்த சந்தேக நபர் கந்தளாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (25)

### படையினரால்...

தம்முடைய மகன யாழ். குடாநாட்டிலுள்ள ஏதோ ஒரு இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார் என்று, இவருடைய பெற்றோர்கள் தெரிவிப்பதுடன் இது குறித்து உரிய விசாரணைகளைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொண்டு தம்முடைய மகனை சிறிலங்காப் படைகளிடம் இருந்து உயிருடன் மீட்டுத் தரும்படியும் கண்ணீருடன் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.. (28)

### துப்பாக்கி...

பொலிசாரிடம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் சிறிலங்காப் பொலிசார் தெரிவித்துள்ளனர். (32)

### மட்டக்களப்பு...

கூறப்படுகின்றது. சம்பவம் இடம் பெற்ற இடத்தில் ரி-56 ரக வெற்றுத் தோட்டாக்கள் 12 சிறிலங்கா பொலிசாரினால் மீட்கப்பட்டுள்ளன.

ஏறாவூர் சிறிலங்கா பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கட்டுநாயக்க விமானத்தளத்தில்

# பாதுகாப்பு அதிகாரிகள் மூவர் கைது

கட்டுநாயக்க விமானத்தளத்தின் ஊடாக நிதி மோசடிகளில் ஈடுபட்டு வந்த விமானத்தளத்தின் மூன்று பாதுகாப்பு அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினரவு 8.30 மணியளவில் இடம் பெற்றதாக சுங்கப் பகுதி அதிகாரி அத்துல லங்காதேவ தெரிவித்துள்ளார்.

குறித்த பாதுகாப்பு அதிகாரிகள் மூவரும் உல்லாசப் பயணி ஒருவரின் மூலம் சுமார் மூன்றுகோடி ரூபாவை சிங்கப்பூருக்கு அனுப்பமுயற்சித்த போதே கைது செய்யப்பட்டுள்ளார்கள்.குறித்த பாதுகாப்பு அதிகாரிகள் கடந்த மூன்று வருடங்களாக இவ்வாறான நிதி மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. இதேவேளை பாதுகாப்பு அதிகாரிகள் பயன்படுத்திய வாகனம் ஒன்றும் சுங்கத் துறையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (32)

# ஐ.நா.வின் இரு அமர்வுகளில்

# சனாதிபதி சந்திரிகா பங்கேற்பு

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் இரண்டு அமர்வுகளில் பங்கேற்கவுள்ளார். முதலாவது அமர்வு எதிர்வரும் செப்ரெம்பர் 14 ஆம் திகதி முதல் 16 திகதி வரை நடைபெறவுள்ள இது உலகத் தலைவர்கள் கூட்டமாக நடைபெறவுள்ளது. ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 60 ஆவது அமர்வு செப்ரெம்பர் 17 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதன்போது 122 நாடுகளின் தலைவர்கள், அரசாங்கத் தலைவர்கள் 55பேர், இரண்டு உப சனாதிபதிகள் மற்றும் இரண்டுபிரதிப்பிரதமர்கள் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (32)

# வலிகாமம் மேற்குப் பகுதியில்

# அடிக்கடி தடைப்படும் மின்சாரம்


வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் அடிக்கடி மின்சாரம் தடைப்பட்டு வருவதால் பொதுமக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

மின்சாரம் தடைப்படுவதால் இரவு நேரங்களில் மாணவர்கள் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாதிருப்பதாகவும்,வானொலி தொலைக்காட்சி போன்ற ஊடகங்களின் செய்திகளைக் கேட்க முடியாதிருப்பதாகவும் கவலை தெரிவிக்கும் மக்கள் குளிர்சாதனப்பெட்டி களில் உணவுப் பண்டங்களை வைத்தெடுப்பதிலும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கின்றனர். (37)

# சிறிலங்கா இராணுவத்தால் முற்றாக அழிக்கப்பட்ட

# கட்டைபறிச்சானை புனரமைப்பது குறித்து ஆராய்வு

மூதூர் கிழக்கில், இராணுவ நடவடிக்கையின் போது முற்றாக அழிக்கப்பட்டு காடாகி, நிலக் கண்ணிகள் புதைக்கப்பட்ட நிலையில் கடந்த 20 வருடங்களாக கைவிடப் பட்ட கட்டைபறிச்சான் தமிழ்க் கிராமத்தை புனர்நிர்மாணம் செய்வது தொடர்பாகவும், இக்கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தஞ்சமடைந்து வாழும் நூற்றுக் கணக்கான குடும்பங்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாகவும், சமூக அபிவிருத்தி நிலையத்தின் அனுசரணையுடன்,கட்டைபறிச்சானில், திருகோணமலை மாவட்ட அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர் து. தவசிலிங்கம் தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது.



அழிவடைந்தநிலையில்....

திருகோணமலை றோட்டறிக் கழகப் பிரமுகர் ஏ.ஏ.ஜெயரட்ணம், சர்வதேச புலம்பெயர்ந்த அமைப்பின் திருகோணமலை மாவட்ட திட்ட அதிகாரி ரி. முரளிதரன், சமூக அபிவிருத்தி நிலைய திருமலை மாவட்டப் பணிப்பாளர் நிரோஷன் மற்றும் ஊர்ப்பிரமுகர்கள், இடம் பெயர்ந்து வாழும் குடும்பங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பெண்கள் கலந்துரையாடலில் பங்குபற்றி, 20 வருடங்களாக பாழடைந்த நிலையில் காணப்படும் கட்டை பறிச்சான் கிராமத்தை மீளக் கட்டி எழுப்ப வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினர்.

காடுகளால் மூடப்பட்டுள்ள காணிகள், இடிபாடுகள் ஆகியவற்றை அடையாளம் கண்டு துப்புரவு செய்வதற்கு முன்பு, கிராமத்தில் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணி மற்றும் மிதிவெடிகளை அகற்றுவதற்குத் தன்னார்வ தொண்டு அமைப்புக்கள் உதவ வேண்டும் என்று இடம் பெயர்ந்த மக்கள் கேட்டுக்கொண்டனர்.

கட்டை பறிச்சான் கிராமத்தை மீள் நிர்மாணம் செய்வதற்காகச் சர்வதேச உதவி அமைப்புக்கள். மற்றும் தேசிய தன்னார்வ அமைப்புக்கள் ஆகியவற்றின் உதவிகள் நாடப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு முன்னோடியாக பல் துறைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திகள் குறித்த தரவுகளை சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று திருமலை மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தின் தலைவர் து. தவசிலிங்கம் கலந்துரையாடலின் போது தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மூதூர்க்கிழக்குப் பிரதேசத்தின் நுழைவாயிலில் கட்டைபறிச்சான் கிராமம் அமைந்துள்ளது. இலங்கை இராணுவத்தினரால் புல்டோசர் மூலம் அழிக்கப்பட்ட வீடுகள் இப்போது பற்றைக் காடுகளால் மூடப்பட்டு காட்சியளிக்கின்றன. (25)

இபபத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.